# சர்வவியாபி
MISSION PRESS 1840

SARVAVIABI

| 02-09-2018 | சமய வளர்ச்சி சமுதாய மறுமலர்ச்சி | 1 | விளம்பி வருடம் ஆவணி 17 | வருட சந்தா ₹ 150<br>தனிப்பிரதி ₹ 6 |
|---|---|---|---|---|

| புத்தகம் 112<br>பக்கம் - 12 | இதழ்<br>34 | e-mail:missionpress48@gmail.com<br>e-mail:missionpress48@yahoo.com | Ph: 0413/<br>2334360 | ஆசிரியர்:அருள்தந்தை C. அந்தோணி ரோச் |
|---|---|---|---|---|


## Knock அன்னை மரியா திருத்தலத்தில் மூவேளை செப உரை

**- திருத்தந்தை பிரான்சிஸ்**



Knock அன்னை மரியாவின் திரு உருவத் திற்குமுன் நான் செபித்த வேளையில், அயர்லாந்து தலத்திருஅவையின் உறுப்பினர் களால் துன்புற்றோரை அன்னையிடம் ஒப்படைத்தேன்.

அன்பு சகோதரர், சகோதரிகளே, அயர்லாந்து மக்களுக்கு மிகவும் விருப்பமான Knock அன்னை மரியா திருத்தலத்தைக் காணும் வாய்ப்பளித்த இறைவனுக்கு நன்றி கூறுகிறேன். அன்னை மரியா காட்சியளித்த சிற்றாலயத்தில் நான் செபித்த வேளையில், உலகெங்கிலும் உள்ள குடும்பங்களை, சிறப்பாக, அயர்லாந்தில் உள்ள குடும்பங்களை அன்னையிடம் ஏந்திச் சென்றேன். இந்தப் பயணத்தின் நினைவாக, ஒரு தங்க செபமாலையை, இத்திருத்தலத்திற்கு காணிக்கையாக வழங்கினேன். பாரம்பரியமாக, இந்நாட்டில், செபமாலைக்கு வழங்கப்படும் மதிப்பை நான் நன்கறிவேன். நாம் மேற்கொள்ளும் இவ் வுலகப் பயணத்தை, அன்னை மரியாவிடம் ஒப்படைப்போம். அலைக்கழிக்கும் புயல்களிலிருந்து இவ்வுலகைக் காப் பதற்கு, கிறிஸ்தவக் குடும்பங்கள் ஓர் அரணாக விளங்கட்டும்.

துன்புற்றோரை அன்னையிடம் ஒப்படைத்தேன்: துன்புறு வோர் அனைவரையும் நமது அன்னை கனிவுடன் கண்ணோக்குவாராக. அன்னையின் திரு உருவத்திற்குமுன் நான் செபித்த வேளையில், அயர்லாந்து தலத்திரு அவையின் உறுப்பினர்களால் பல வழிகளில் துன்புற்றோரை அன்னையிடம் ஒப்படைத்தேன். இந்தக் காயம், உண்மை யையும், நீதியையும் உறுதியுடன் தொடர்வதற்கு ஒரு சவாலாக அமைந்துள்ளது. இந்தப் பாவங்களுக்காக இறைவனின் மன்னிப்பை நான் இறைஞ்சுகிறேன்.

Knock அன்னை மரியா திருத்தலத்திற்கு திருப்பயணி யாக வந்திருக்கும் வேளையில், வட அயர்லாந்து மக்களை சிறப்பாக வாழ்த்துகிறேன். அயர்லாந்து மக்கள் அனைவரை யும் உடன்பிறந்தோராய் காத்து, அரவணைக்க அன்னை மரியாவிடம் வேண்டுகிறேன். அயர்லாந்தில் ஒற்றுமையும், நீதியும், நல்லிணக்கமும் உருவாக வேண்டுமென்று செபிக் கிறேன். இக்கருத்துக்கள் அனைத்தையும் இணைத்து, மூவேளை செபத்தின் வழியே, அன்னையின் பரிந்துரையை வேண்டி, செபிப்போம்.

### திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி:

♦ "அன்பு, அனைத்து இன்னல்களையும் மேற்கொள்கின்றது, அவற்றை ஏற்று வாழ, அன்பு நமக்கு வலிமையளிக்கின்றது."

♦ "விசுவாசம் நினைவால் ஊட்டம் பெறுகிறது, கடவுள் நமக்காக எவ்வளவு வியத்தகு செயல்களைச் செய்துள் ளார், நம் வானகத் தந்தை எவ்வளவு தாராளமிக்கவர்"

## சேர்ந்து செபிக்கும் குடும்பம் சேர்ந்தே இருக்கும்

நற்செய்திக்கு சான்றுகளாக வாழ்வதன் வழியாக, இறைவனின் கனவுகளை நனவாக் கவும், இறை மக்கள் ஒன்றாக இணைந்து ஒன்றிப்பில் வாழவும், நம்மால் உதவ முடியும்.

அன்பு சகோதரர், சகோதரிகளே, மாலை வணக்கம், கொண்டாட்டங்கள் என்பவை நம்மை மனிதாபிமானம் மிக்கவர்களாகவும், கிறிஸ்தவ பண்புடையவர்களாகவும் மாற்று கின்றன. குடும்ப விழா வரும்போது, அங்கு, அனைத்து உறவுகளின் இருப்பும் உணரப் படுகிறது. அதில் கலந்து கொள்ள முடியாத, மற்றும் வெகு தூரத்தில் வாழ்கின்ற, உறவினர் களின் இருப்பும் உணரப்படுகிறது. கிறிஸ்து வில் ஒரே குடும்பமாக இருந்து, உலகெங்கும் பரந்து வாழும் நாம் அனைவரும், இந்த ட்பளின் கொண்டாட்டத்தில் பங்கு பெறுகிறோம்.

**மகிழ்வைப் பிரதிபலிக்கும் குடும்பங்கள் :** இறை மக்களில் பெரும்பான்மையினராக இருப்பது குடும்பங் களே, குடும்பங்கள் இல்லையெனில் திருஅவையின் நிலை என்னவாக இருக்கும்? இந்த உலகில் கடவுளின் அன்பு தரும் மகிழ்வை பிரதிபலிப்பவர்களாக ஒவ்வொரு குடும்பமும் இருக்க வேண்டும் என இறைவன் விரும்புகிறார். கடவுளின் பிரசன்னத்தை தங்கள் வாழ்வில் பிரதிபலித்த எண்ணற்ற புனிதர்களை வரலாற்றில் காண்கிறோம்.இன்றும் நம்மைச் சுற்றி நிறைய பேர் வெளியே தெரியாமல், அமைதியில் வாழ்ந்து கொண்டிருப்பதைக்காணலாம். அனைத்துக் குடும்பங்களிலும், பிறரை அன்பு கூர்ந்து, மன்னித்து, இரக்கம் காட்டும் அனைத்துக் குடும்பங்களின் திருமணங்களும், குடும்ப வாழ்வும், கடவுளின் அன்பில் நங்கூரமிட்டதாக இருக்கும்போதுதான், அவற்றின் அனைத்து வனப்பும் மிளிர்கின்றன. தந்தையாரும், தாய்மார்களும், தாத்தா பாட்டிகளும், குழந்தைகளும், பேரக்குழந்தைகளும்,அன்பின் நிறைவை குடும்பங்களில் காண அழைப்புப் பெற்றுள்ளார்கள்.

**திருத்தந்தை: நமதன்னையின் அணிகள் கூட்டத்திற்கு செய்தி:** திருஅவை உண்மையைக் கூறவேண்டி யிருப்பதால், பாவத்தைக் கண்டிக்கிறது, அதே நேரம், பாவி என தன்னை ஏற்பவரை அரவணைத்துக் கொள்கிறது என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திருமணமான கிறிஸ்தவத் தம்பதியர் பங்குபெறும் ஒரு பன்னாட்டு கருத்தரங்கிற்குச் செய்தி அனுப்பினார். போர்த்துக்கல் நாட்டில் பாத்திமாவில் "நமதன்னையின் அணிகள்" எனப்படும், ஒரு பொதுநிலை இயக்கத்தினர் நடத்திய கருத்தரங்கிற்குச் செய்தி அனுப்பிய திருத்தந்தை, தந்தையிடம் திரும்பி வந்த காணாமல் போன மகனின் செயலை மையப்படுத்தி இக்கருத்தரங்கு நடைபெற்றதைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

**புனித மோனிக்காவைப்போல் ஒவ்வொரு தாயும் தன் குழந்தைகளுக்காக இடைவிடாது செபிக்க வேண்டும் - திருத்தந்தை**

ஆசிரியர் பேனா...

# அன்னையே! ஆரோக்கிய தாயே! வரம் அருள்வாயே!!

**செ**ப்டம்பர் மாதம் என்கிற பொழுதே, நம் நினைவுக்கு வருவது ஆரோக்கிய அன்னையின் பிறப்பு விழா. அன்னை அவர்களை படைப்பின் தொடக்கத்திலேயே மாசு மருவற்றவராக படைக்க தம் கருத்தில் கடவுள் இருத்தியிருந்தார்.

அண்மையில் அயர்லாந்து நாட்டில், டப்ளின் நகரத்தில் அனைத்துலக குடும்ப மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றிய நம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஒரு சிறுமி தன்னிடம் கேட்ட கேள்வி ஒன்றையும் அதற்கு தாம் அளித்த பதிலையும் குறிப்பிட்டார். “கடவுள் உலகைப் படைப்பதற்கு முன் என்ன செய்து கொண்டிருந்தார்?” – சிறுமியின் கேள்வி. திருத்தந்தை அவர்கள் இக்கேள்வி தம்மை திக்குமுக்காடச் செய்ததாக குறிப்பிட்டு, “கடவுள் உலகைப் படைப்பதற்கு முன் அன்பு செய்து கொண்டிருந்தார். தந்தை, மகன், தூய ஆவி ஆகிய மூன்றாட்களாகயிருந்தும் ஒரே கடவுளாக அவரது அன்பு, மகன் மேல் பொழியப்பட்டுக் கொண்டிருந்தது. அளவில் அடங்கா இப்பேரன்பு, தன் முழுமையிலிருந்து வெளியில் படைப்பை உருவாக்கச் செய்தது. அந்த படைப்பை அளவிட முடியாத அளவு அன்பு செய்தார். மனிதன் பாவம் செய்தபோது அவனை மீட்க அன்பினால் உந்தப்பட்டு தம் மகனை அனுப்பி கையளித்தார். அவர் அன்பே உருவானவர்” என்று கூறினார்.

இந்த அன்பே உருவானவர் உலகில் உதிக்க இறைவன் தேர்ந்து கொண்ட அற்புத புனித ஜீவிதான் அன்னை கன்னிமரியா. தன் மகன் பிறக்க இருக்கும் அன்னையை மிகப் புனிதமாக, மாசுமருவற்றவராக, அருள் நிறைந்தவராக, ஆரோக்கியங்கள் – நலன்கள் – நிரம்பியவராக அவர் படைத்தார். அவரே கபிரியேல் தூதர் மூலம் “அருள்நிறைந்தவரே வாழ்க!” என்று வாழ்த்துகிறார். முப்பொழுதும் கன்னியாக அவரை ஏற்படுத்துகிறார். தூதரின் அருள்மொழிக்கு “உம் விருப்பப்படியே எனக்கு ஆகட்டும்” (Amen) என்று அளித்த ஒரே பதிலில், தன் நிபந்தனையற்ற முழு நம்பிக்கையை (விசுவாசம்) அன்னை வெளிப்படுத்தினார். இந்த ஒப்புதலின் பேறுபலன்களினால் கண்ணுக்கும் கருத்துக்கும் எட்டாத இறைவன் “அன்னை கன்னி மரியா”வின் மகனாகத் தோன்றினார். பெத்லகேம், நாசரேத்து, எருசலேம், கலிலேயா, கல்வாரி – இவ்விடங்களில் நிகழ்ந்தவை நாம் அறிவோம். கல்வாரி மலைவரை தம் மகனுடன், உடன் வழிநடந்த அன்னையை, இயேசு நமது அன்னையாக தியாகம் செய்தார். திருத்தூதர் யோவான் மூலம் இந்த உறவின் ஆளுமை உருவாக்கம் இடம் பெற்றது. இயேசுவின் விலா குத்தப்பட்டபோது வெளிப்பட்ட இயேசுவின் கடைசி துளி இரத்தமும் தண்ணீரும் திருச்சபையின் பிறப்பின் அடையாளம். திருச்சபை இயேசுவின் இரத்தத்தால் ஊட்டமும் தண்ணீரால் தூய்மையும் பெறுகிறது. பெந்தகோஸ்து நாளில் தூய ஆவியார் வல்லமையுடன் இறங்கி வந்தபோது திருச்சபை முழு பிறப்பை எய்துகிறது. அத்தருணத்தில் அன்னை தூயஆவியால் இரண்டாம் முறையாக நிரப்பப்படும் பேறு பெறுகிறார்.

இயேசுவின் வாழ்விலும், திருச்சபையின் பிறப்பின் வேளையிலும் உடன் இருந்த அன்னை கன்னி மரியா, இன்று திருச்சபையில் இருந்து வழிநடந்து நமது இரக்கத்தின் அன்னையாக, ஆரோக்கியம் தரும் அன்னையாக, வழிகாட்டும் அன்னையாக இருக்கிறார். எனவேதான் நம் திருத்தந்தை தொன்று தொட்டு (நான்காம் நூற்றாண்டு) வரும் “திருச்சபையின் அன்னை” என்ற நம்பிக்கையை, கடந்த மே மாதம் 16 ஆம் நாள் விழாவாக ஏற்படுத்தினார். தூய ஆவியின் வருகை விழா வுக்கு அடுத்த நாள் இவ்விழா கொண்டாடப்பட, அறிக்கையிட்டு, அனைத்துலக திருவழிபாட்டு காலண்டரில் இணைத்தார்.



இதனால் திருச்சபையின் நலம் தரும் அன்னையின் உடனிருப்பு உறுதியாகிறது.

இவற்றையெல்லாம் உற்று நோக்கும்போது, அன்னையின் பிறப்பே, மாசுமருவற்றவரான, ஆரோக்கியமான பிறப்பே அடிப்படையாகவும் ஆதார மாகவும் விளங்குகிறது. இது இறைவனின் திருவுளம். இதைத் தான் அன்னை அவர்கள் தமது புகழ்ப்பாடலில் “வல்லமை மிக்கவர் எனக்கு அரும்பெரும் செயல்கள் பல புரிந்தார்” என்று இறைவன் தனக்கு அருளிய வரங்களுக்கு அங்கிகாரம் அளித்து அறிக்கை செய்கிறார்.

இன்று உலகின் பல இடங்களில் அன்னை அவர்கள் சிறப்பாக வீற்றிருந்து நமக்காக பரிந்து பேசுகிறார். வேளை நகரில் அமர்ந்து எல்லா மனிதருக்கும் பரிந்து பேசி அருள் வரங்களை இறை வனிடமிருந்து பெற்றுதரும் “வேளை நகர் ஆரோக்கிய அன்னை” யை நோக்கி, இலட்சக்கணக்கான சகோதர சகோதரிகள் திருப் பயணமாக கால்நடையாக சென்று அடைக்கலமாகிறார்கள். அன்னையின் அன்புக்கும், ஆதரவுக்கும், இடம் பெறும் புதுமைகளுக்கும் ஆலய வளாகத்தில் உள்ள அருங்காட்சியகம் சான்றளிக்கிறது.

அன்னை வெளிப்படுத்தியது போன்ற நம்பிக்கையுடன் அவரிடம் செல்வோம். நம் சகோதர சகோதரிகளை அன்னையைப் போலவே அன்பு செய்வோம். தந்தை, மகன், தூய ஆவி என்று மூன்றாட்களாய் அதே வேளையில் ஒரே கடவுளாய் இலங்கும் பரம்பொருள், அன்னையின் பரிந்துரையில் நமக்கு அருள் வரங்களை வாரி வழங்குவார். அன்னைக்கு பிறந்த நாள் வாழ்த்துக்களைத் தெரிவிப்போம். “அன்னையே! ஆரோக்கிய தாயே! அருள் புரிவாயே! வரம் அருள்வாயே!!” என்று செபிப்போம்.

---

**சுற்றுச்சூழல் பேரழிவுக்குரிய முதல் எச்சரிக்கைகள் விடப்பட்டுள்ளன:** ஜப்பானில் நிகழ்ந்த அணுகுண்டு பேரழிவு உட்பட, மனித வரலாற்றில் பல பேரழிவுகள் நிகழ்ந்துள்ளன என்றும், தற்போது சுற்றுச்சூழல் பேரழிவு நிகழப்போவதை உணர்த்தும் முதல் எச்சரிக்கைகள் விடப்பட்டுள்ளன என்றும் மியான்மார் கர்தினால் சார்லஸ் மாங் போ அவர்கள் பீதேஸ் செய்திக்கு அறிக்கையொன்றை அனுப்பியுள்ளார். தான் வழங்கும் குறிப்புக்கள், உலக வங்கி அளித்துள்ள புள்ளி விவரங்களின் அடிப்படையில் கூறப்படுகின்றன என்பதை தெளிவுபடுத்திய கர்தினால் போ அவர்கள், தற்போதைய நிலை தொடர்ந்தால், 2050ம் ஆண்டுக்குள் 15 கோடிக்கும் அதிகமான மக்களுக்கு ஒரு கிண்ணம் நீரும் கிடைக்காமல் போகும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார். செல்வம் கொழிக்கும் நாடுகள், எதிர்காலத்தைக் குறித்து எவ்வித அக்கறையுமின்றி, இயற்கையை அளவுக்கதிகமாக பயன் படுத்தி வருவதால், வளரும் நாடுகளும், வறுமைப்பட்ட நாடுகளும் துன்புற்று வருகின்றன என்று கர்தினால் போ அவர்கள் கவலை வெளியிட்டார். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்ட “இறைவா உமக்கே புகழ்” என்ற திருமடல், நாம் வாழும் ஆபத்தான காலத்திற்கு தகுந்த வழிகாட்டி என்று கூறிய கர்தினால் போ அவர்கள், செல்வந்தர்கள் கேட்க விரும்பாத உண்மைகளைப் பேச, திருத்தந்தையைப் போல நாம் ஒவ்வொருவரும் அழைக்கப் பட்டுள்ளோம் என்று எடுத்துரைத்தார். -Fides

வாரச் சிந்தனை

**ஆண்டின் பொதுக்காலம் 23ஆம் ஞாயிறு (09-09-2018)** எசா.35:4-7அ; யாக்.2:1-5; மத்.7:31-37

# "ஆண்டவர் அனைவரையும் அன்பு செய்கிறார்"

அருள்திரு. L. ஆரோக்கியதாஸ்,
உதவி பங்குதந்தை, பேராலயம், புதுவை.



"வேரில்லா மரமும் இல்லை, வேற்றுமையில்லா மனிதனும் இல்லை". இறைமகன் இயேசுவுக்கு பிரியமான சகோதர சகோதரிகளே! இந்த உலகிலே மனிதர்கள் அவர்களின் வேலையை பார்க்க மறந்தாலும் மறப்பார்கள், வேற்றுமையை பார்க்க ஒருவரும் ஒருபோதும் மறப்பதேயில்லை. மனிதன் தன்னால் இயன்றவரை எல்லா நிலைகளிலும், நேரங்களிலும், எல்லா இடங்களிலும் பல்வேறு வேறுபாடுகளைக் கடைப்பிடிக்கிறான். நாடாக இருந்தாலும் சரி, வீடாக இருந்தாலும் சரி நாள்தோறும் வேற்றுமைகளை நன்றாகவே கடைபிடிக்கிறான். வளர்ந்த நாடுகள் - வளரும் நாடுகள், மேலை நாடுகள் - கீழை நாடுகள், வெள்ளையர்கள் - கருப்பர்கள், ஆளுபவர்கள் - அடிமைகள், படித்தவர்கள் - படிக்காதவர்கள், உயர்ந்தவன் - தாழ்ந்தவன், ஏழை – பணக்காரன், உறவுக்காரன் - உதவாக்கரை, பிடித்தவன் - பிடிக்காதவன்....... இப்படி ஏராளமான வேற்றுமைகள் மனிதனின் மனதில் மண்டிக்கிடக்கின்றன. பிரியமானவர்களே! கடவுள்தான் அனைத்து மக்களையும், அனைத்து படைப்புகளையும் படைத்தார். அவர் அனைவரையும் ஒருவரைப்போல் ஒரே மாதிரியாக படைக்கவில்லை. மண்ணுக்கு மண் மனிதன் மாறுபடுகிறான். பல நிறப்பூக்கள் சேர்கின்ற போதுதான் மாலைக்கு அழகு கூடுகிறது. வேற்றுமைகளெல்லாம் ஒன்றுகூடும்பொழுது பன்முகஅழகு உருவாகிறது. ஆனால் இந்த வேறுபாடுகளை வெறிகொண்டு பின்பற்றி, நான்தான் உயர்ந்தவன், நான் மட்டும்தான் உயர்ந்தவன், நான் மட்டும்தான் வாழனும் பிறர் யாரும் வாழக்கூடாது என்று எண்ணி, பிறரை வெறுக்கிறபோது நாம் கடவுளின் விருப்பத்திற்கு மாறாக செல்கிறோம். ஏனெனில் கடவுள் தாம் படைத்த அனைத்தையும் அன்பு செய்கிறார். சாலமோனின் ஞானம் 11:24ல் நாம் வாசிக்கின்றோம் "படைப்புகள் அனைத்தின்மீதும் நீர் அன்புகூர்கிறீர். நீர் படைத்த எதையும் வெறுப்பதில்லை. ஏனெனில் நீர் எதையாவது வெறுத்திருந்தால் அதைப் படைத்திருக்கவே மாட்டீர்". கடவுளே அனைவரையும் அன்பு செய்கிறபோது, அவர்களை வேறுபடுத்தி வெறுப்பதற்கு நாம் யார்?.

இவ்வாறு அனைவரையும் அன்பு செய்கிற இறைவனின் விருப்பத்திற்கு மாறாக யாரெல்லாம் வேற்றுமைபடுத்தப்பட்டு, உரிமைகள் பறிக்கப்பட்டு, தாழ்வாகக் கருதப்படுகிறார்களோ அவர்கள் அனைவர் சார்பாகவும் கடவுள் இருக்கின்றார், அவர்களை அனைத்து விதமான இடுக்கன்களிலிருந்தும் அவர் விடுவிக்கின்றார். இன்றைய முதல் வாசகத்தில் எசாயா இறைவாக்கினர்: ஏழைகள், உள்ளம் உடைந்தோர், ஊனமுற்றோர் மற்றும் வாய்ப்பேசாதோர் இவர்களை அன்பு செய்து அவர்களுக்கு வாழ்வு கொடுக்கும் கடவுளை முன்னுரைக்கின்றார். இன்றைய பதிலுரைப்பாடல் திருப்பாடல் 146-ம் கூட "ஆண்டவர் ஒடுக்கப்பட்டோர்க்கான நீதியை நிலை நாட்டுகின்றார், பசித்திருப்போருக்கு உணவளிக்கிறார், சிறைப் பட்டோர்க்கு விடுதலை அளிக்கின்றார், ஆண்டவர் பார்வை யற்றோரின் கண்களைத் திறக்கின்றார், தாழ்த்தப்பட்டோரை உயர்த்துகின்றார் மேலும் அவர் அயல்நாட்டினரை பாதுகாத்து, அனாதைப் பிள்ளைகளையும் பெண்களையும் ஆதரிக்கின்றார்" என்று தாழ்ந்தோரின் சார்பாக செயலாற்றும் இறைவனை படம்பிடித்துக்காட்டுகிறது.

அன்பிற்குரியவர்களே! நோய், ஏழ்மை போன்றவை இறைவனின் சாபம், தண்டனை என்று இஸ்ராயேல் மக்கள் நினைத்தனர், ஆனால் ஆண்டவர் ஏழைகளை வெறுப்பவரல்ல. இன்றைய இரண்டாம் வாசகத்தில் "ஆள்பார்த்து செயல்படாதீர்கள்" என்று திருத்தூதர் யாக்கோபு கூறுகிறார். இன்று அகில உலகெங்கும் மக்கள் இரண்டு இதயங் களையும், இரண்டு முகங்களையும் கொண்டிருக்கிறார்கள். இருப்பவர்களுக்கென்று இனிமையான இதயமும், இனிமையான முகமும், இல்லாதவர்க்கென கடின இதயமும் கடின முகமுமாக இரண்டுபட்டு கிடக்கிறார்கள். ஏழ்மையின் காரணமாகவோ அல்லது நோயின் காரணமாகவோ வேறுபாடுகாட்டி நாம் யாரையும் வெறுத்தலாகாது. ஏனென்றால் உலகத்தின் பார்வையில் ஏழைகளாக இருப்பவர்களை ஆண்டவர் நம்பிக்கையில் செல்வர்களாகவும் தம்மீது அன்பு செலுத்துபவருக்கு வாக்களிக்கப்பட்ட உரிமைப் பேறாகப் பெறுபவர்களாகவும் கடவுள் தேர்ந்துகொள்கிறார்.

இன்றைய நற்செய்தியில் ஏழைகளின் பங்காளனாம் எம்பெருமான் இயேசு காது கேளாமல் சமுதாயத்தால் பாவியாக பார்க்கப்பட்டு, வேற்றுமைபடுத்தப்பட்ட ஒரு மனிதனை தொட்டு குணப்படுத்துகிறார். யோவான் நற்செய்தி அதிகாரம் 11- ல் இறந்த லாசரை "லாசரே வெளியே வா!" என்று ஒரே ஒரு வார்த்தையால் உயிர்ப்பித்த இயேசு இம் மனிதனையும் ஒரே ஒரு வார்த்தையால் குணப்படுத்தி யிருக்கலாம் அல்லவா!. ஆனால் இயேசு வேண்டுமென்றே தன் கைகளால் அந்த மனிதனைத் தொட்டு குணப்படுத்துகிறார். தீண்டத்தகாதவன் என்று கருதப்பட்டவனை இயேசு தீண்டுகிறார். பிற மக்களால் கண்டுகொள்ளப்படாமல், புறக்கணிக்கப்பட்டு, மனிதன் என்கிற மாண்பு இன்றி இருந்த அம்மனிதனை மீண்டுமாக இயேசு சமுதாயத்தோடு சேர்ப்பிக்கின்றார். இயேசு தன் வாழ்வில் யாரையும் வேறுபடுத்திப் பார்க்கவில்லை. நம் வாழ்வில் நாமும் வேற்றுமையில் ஒற்றுமையை ஆதரித்து அனைவரையும் அன்பு செய்கிறபோது இயேசுவின் வழியில் செல்கிறோம். ஆனால் இன்றைய காலக்கட்டத்தில் நம் நாட்டில் வேற்றுமை யில் ஒற்றுமை என்கிற உன்னதத்தை குலைக்கக்கூடிய சூழல்கள் உருவாகிவிட்டன. அனைவரும் கடவுளால் படைக்கப்பட்டவர்கள், அனைவரும் சமமானவர்கள் என்பதை உணர்கிறபோது நாம் ஒருவருடைய பெயரை, புகழை மற்றும் அந்தஸ்த்தை வைத்து நாம் வேற்றுமை பாராட்ட மாட்டோம். பிரியமானவர்களே! இறைவன் படைத்தது மனிதனை, மனிதனை மட்டும்தான். ஆனால் மனிதன் பல பிரிவினைகளை படைத்துவிட்டான். எனவே இறைவன் படைத்த மனிதனை அன்பு செய்வோம். மனிதன் படைத்த பிரிவினைகளை வேரறுப்போம். ஆண்டவரே அனைவரையும் அன்பு செய்கிறபோது, நாம் பிறரை வெறுப்பது நியாயமாகுமா! "பிறப்பு ஒருமுறை, இறப்பு ஒருமுறை, இதற்கிடையில் ஏன் வன்முறை" சிந்திப்போம்! செயல்படுவோம். – ஆமென்.

---

**"அன்பின் மகிழ்வு" - புதிய நூல்:** 'அன்பின் மகிழ்வு' (Amoris Laetitia) என்ற திருத்தூது அறிவுரை மடல், இரு உலக ஆயர்கள் மாமன்றங்களில் நிகழ்ந்த கருத்துப் பரிமாற்றங் களின் விளைவாக உருவான மடல் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பொதுநிலையினரும், இறையிய லாளருமான Steven Walford என்பவருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். இங்கிலாந்தில் வாழும் Walford அவர்கள், 'அன்பின் மகிழ்வு' என்ற மடலை மையப்படுத்தி, உருவாக்கி யுள்ள ஒரு நூலைக் குறித்து, திருத்தந்தை எழுதியுள்ள இக்கடிதம், அந்நூலின் அணிந்துரையாக வெளிவந்துள்ளது. "திருத்தந்தை பிரான்சிஸ், குடும்பம் மணமுறிவும், உண்மைக்கும் இரக்கத்திற்கும் சார்பாக" என்ற தலைப்பில் வெளியாகியுள்ள இந்நூல், 'அன்பின் மகிழ்வு' என்ற மடலில் திருத்தந்தை பதிவு செய்துள்ள கருத்துக்களை வலியுறுத்தி யுள்ளது. இன்றைய உலகில் குடும்பங்கள் சந்திக்கும் பிரச்சனைகளான குழந்தைகளின் கல்வி, திருமண தயாரிப்பு, சவால்களைச் சந்திக்கும் குடும்பம் ஆகிய பல கருத்துக்கள் தன் மடலில் விவாதிக்கப்பட்டுள்ளன என்று திருத்தந்தை அவர்கள் Walford அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். - *திருஅவை செய்தி.*



## இறங்கி வந்து நெருங்கி வந்த உறவு

20

Sr.M.லில்லி மரி ME, புதுச்சேரி.

**நினைவாக...** இயேசு நற்கருணையை ஏற்படுத்தியபோது அவரே ஒரு வேண்டுகோள் போலவும் ஒரு கட்டளைபோலவும் இதை என் நினைவாகச் செய்யுங்கள் என்றார். "இதைச் செய்யும்போதெல்லாம் என் நினைவாகச் செய்யுங்கள்" என்று இயேசு சொன்னார். திருப்பலியின் மையப்பகுதியில் "என் நினைவாக..." என்பது வைக்கப்பட்டுள்ளது.

எதை நினைவாகச் செய்ய வேண்டும்? நிச்சயமாகப் பாடுகளை. எனவே குரு அப்பத்தின் மீதும் இரசத்தின் மீதும் சிலுவை அடையாளம் வரைகிறார். வேறு சில திருவழிபாட்டு முறைகளில் குரு தன் கரங்களைச் சிலுவை வடிவில் தன் மார்பின் மீது வைக்கிறார்.

"ஆதலால் நீங்கள் இந்த அப்பத்தை உண்டு கிண்ணத்திலிருந்து பருகும்போதெல்லாம் ஆண்டவருடைய இறப்பை அவர் வரும் வரை அறிவிக்கிறீர்கள் என்று புனித பவுல் கூறியுள்ளார். (1 கொரி 11:26). ஒப்புக்கொடுத்தலில் அப்பத்தையும் இரசத்தையும் ஆசீர்வதிக்குமாறு தந்தையாகிய கடவுளை மன்றாடினோம்.

அந்நேரத்தில் நாம் இவ்வாறு தியானிக்கலாம்: கலிலேயாக் கடற்கரையில் இயேசு போதித்ததைக் கேட்டுக் கொண்டிருந்த கூட்டத்தில் நானும் இருந்திருந்தால் எவ்வித மகிழ்ச்சியோடு நான் அதைக் கேட்டிருப்பேன்.

இறந்த இலாசரைக் கல்லறையிலிருந்து வெளியே அழைத்த நேரத்தில் நான் அங்கு இருந்திருந்தால் எப்படிப்பட்ட சாட்சியாக நான் இருந்திருப்பேன்! இராவுணவின் போது இயேசு நன்றி கூறி அப்பத்தைப் பிட்டுக்கொடுத்துச் சொன்ன வார்த்தைகளை நான் கேட்டிருந்தால் என் இதயம் வாளால் ஊடுருவப்பட்டிருக்காதா? அன்னை மரியாவோடு சிலுவை அடியில் நான் நின்றிருந்தால் அன்பாலும் மன வேதனையாலும் நிலைகுலைந்திருக்க மாட்டேனா?

பாஸ்கு ஞாயிறு காலை கல்லறையின் கல் புரட்டப் பட்டிருப்பதையும் வெறுமையான கல்லறையையும் கண்டிருந் தால் பெரும் உணர்ச்சி வெள்ளத்தில் மூழ்கியிருக்க மாட்டேனா? என் இதயமே இந்தத் திருப்பலியில் இதை யெல்லாம் நினைவில் நிறுத்திக்கொள். இதுவும் "நினைவாகச் செய்வது" அல்லவா?

நான் இத்திருப்பலியில் பிரசன்னமாக மட்டுமல்ல அதில் பங்குபெறுபவனாகவும் இருக்கிறேன். உன் ஆன்மாவின் ஆழத்தில் சிலுவையிலிருந்து சொட்டும் இரத்தத்தை நினைவில் வைத்துக்கொள். ஏனெனில் அந்தத் துளிகள் இயேசுவின் நெற்றியிலிருந்து சொட்டியவை.

**இறந்தவர்களும் பாவிகளாகிய நாமும்...** பலியை மட்டுமா அர்ப்பணிக்கிறோம்? இல்லை, திருப்பலி என்பது சமூகமாகச் செலுத்தப்படும் பலி. கிறிஸ்து மேலே உயர்த்தப்படும் முன் போராடும் திரு அவையும் மாட்சியுறும் திரு அவையும் சிலுவையைச் சூழ்ந்துள்ளது. இப்போதுதான் துன்புறும் திரு அவை நினைவு கூறப்படுகிறது. இறந்தவர்களின் ஆன்மாக் களுக்காகவும் பாவிகளாகிய நமக்காகவும் திரு அவை மன்றாடுகிறது.

முற்காலத்தில் இறந்தோருக்காக செபிக்கும் பழக்கம் யூதர்களிடையே இருந்தது. அவர்கள் தங்கள் செபக் கூடங்களில் இறந்தோருக்காகச் செபித்து வந்தனர். ஏனெனில் அவர்கள் உயிர்ப்பு உண்டு என்று நம்பினர். இதைப் புனித கிறிசோஸ்தோம் யோவான் திருத்தூதர்கள் காலத்தில் இருந்து இந்தப் பழக்கம் திரு அவையில் இருந்து வருவதாக உறுதியோடு கூறியிருக்கிறார்.



உத்தரிக்கிற தல ஆன்மாக்களை நினைப்பதே நம் பாவங்களை நினைக்க நம்மைத் தூண்டுகிறது. நாமும் ஒரு நாள் அந்த இடத்துக்குப் போக நேரிடும். அதனால்தான் அந்த நினைவு நம்மை இறந்தோருக்காக ஆர்வத்தோடு மன்றாடச் செய்கிறது.

குரு மன்றாடுகையில் புனிதர் களையும் மறைசாட்சியரையும் நமக்காக மன்றாட அழைக்கிறார். கிறிஸ்தவர்களின் நம்பிக்கையின் பெரும் உண்மைகளில் ஒன்றான புனிதர்களின் சமூக உறவை நினைவூட்டுகிறது.

ஆண்டவரே! நம்பிக்கையோடு இறந்த எங்கள் சகோதர சகோதரிகளுக்காக வேண்டுகிறேன். அவர்கள் இன்னும் இருளில் இருந்தால் அங்குள்ள நான் அன்பு செய்தவர் களுக்காகவும் என்னை அன்பு செய்தவர்களுக்காகவும் மேலும் என் நினைவில் நிற்கின்றவர்கள், நின்றவர்கள் அனைவருக்காகவும் யாவராலும் மறக்கப்பட்டவர்களுக்காகவும் மன்றாடுகிறேன். இங்கு கூடியுள்ள மக்களின் செபம் இந்த ஆலயத்தில் எதிரொலிக்கிறது. அவற்றோடு என்னுடை யதையும் இணைத்து உமக்கு அளிக்கிறேன். அவர்களை மீட்டருளும். என்னையும் மீட்டருளும்.

**நன்றி கூறல்...** ஒரு சில மன்றாட்டுகளுடன் செபங்கள் முடிய இருக்கின்றன. குரு அப்பத்தையும் இரசத்தையும் உயர்த்தி "இவர் வழியாக, இவரோடு, இவரில்" என்னும் புகழ்ச்சி மன்றாட்டைக் கூறுகிறார். இறைமக்கள், "ஏனெனில் ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமதே" என்று பதில் கூறுகின்றனர். மீட்பு முழுவதும் நிறைவேற்றப் பட்டுவிட்டது. இறைமக்களிடையே ஆண்டவர் தந்த வாக்கு நிறைவேறும் என்ற மகிழ்ச்சி மட்டும் உண்டு. அது படைப்பின் இறுதியில் தொடக்க நூலில் கண்ட மகிழ்ச்சிக்குச் சமம். எல்லாம் தூய்மையாகவும் உண்மையானதாகவும் ஆகி உலகம் புத்துயிர் பெற்றுள்ளது. ஏனெனில் கடவுள் மனிதன் ஆனார். மேலே உயர்த்தப்பட்ட ஒரு துண்டு அப்பத்தாலும் ஒரு கிண்ண இரசத்தாலும் மண்ணுலகில் உள்ள எல்லாம் இறை மாட்சிக்கு வாக்களிக்கப்பட்டுள்ளது. - தொடரும்

**வாசகர் கடிதம் :** அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு தங்களது வாசக சகோதரர் எழுதிக் கொள்வது. 12-8-18 இதழில் பேராசிரியர் குழந்தைராஜ் அவர்கள் நற்கருணையில் கிறிஸ்துவின் நிறை பிரசன்னம் என்ற கட்டுரையின் வாயிலாக நற்கருணையின் பிரசன்னத்தை மிக தெளிவாக விளக்கியுள்ளார். அவருக்கு எனது நெஞ்சம் நிறைந்த நன்றி. கற்றது கையளவு கல்லாதது உலகளவு என்பர். நான் இன்னும் விவிலியத்தை அர்த்தமுள்ள, ஆழமுள்ள தாக்கிக்கொள்ள விரும்புகிறேன். விவிலியத்தில் சுருக்கமான வசனம் "வாழ்வுதரும் உணவு நானே" ஒரு சக்கரத்தின் மைய அச்சுப்போல் உள்ளது. அவரது வார்த்தை வாழ்வு தருகிறது. அந்த வாழ்வை இயேசுவின் உடல் தருகின்றது என சுட்டிக்காட்டியுள்ளார். ஏழு திருவருட்சாதனங்களில் மையமாக விளங்குவது நற்கருணையே. இதனை நாள்தோறும் பெற்று நம் விசுவாசத்தை வளர்க்கிறோம். இயேசு நற்கருணையில் உண்மையிலேயே பிரசன்னமாக உள்ளார் என்பதை எப்படி நம்புவது என்ற ஐயப்பாட்டிற்கு அவர் கூறும் விளக்கம் மிகவும் அருமை. அப்பிரசன்னம் உண்டு என்பது மூன்று நிலைகளை தாண்டி வந்துள்ளது. சாதாரண அப்பம் (ஓஸ்தி) மறு ரூபமாக்கப்பட்ட இயேசு வின் திருஉடல், திருஇரத்தமாவதை பழைய ஏற்பாட்டு நூல்களில் ஒப்பிட்டு விளக்கியுள்ளார். இது போன்ற கட்டுரைகளை தொடர்ந்து வெளியிட்டு விவிலியத்திலுள்ள வார்த்தைகளை ஆழ்ந்து தியானிப் பதற்கு தங்களை வேண்டுகிறேன். வரலாற்றை பிரித்து நமக்கு வாழ்வு தரும் ஊற்று நீராக விவிலியம் உள்ளது, அதனை தொடர்ந்து வாழ்வாக்குவோம். நன்றி!

திரு. S.G. ஜோசப் ராஜமாணிக்கம்
மதுரை

வாசகர் திரு.S.G.ஜோசப் ராஜமாணிக்கம் அவர்களுக்கு நன்றி.- ஆசிரியர்.



# மறைமாநில மாமன்றம் மலர்க குடும்ப வாழ்வு

– சுவாமி ஆ. லூயிஸ்.

பல்லாயிரக்கணக்கான கிறிஸ்தவக் குடும்பங்களைக் கொண்டுள்ள நமது மறைமாவட்டத்தில் அன்னை மரியாளும் புனித சூசையப்பரும் பாதுகாவலாக இருந்து, ஆயர், குருக்கள், துறவிகள் வழியாக வழிநடத்தப்பட்டு வருவதை உணர்ந்து கடவுளுக்கு நன்றி கூறுவோம். இன்னமும் சிறந்த முறையில் திருக்குடும்பத்தைப் போல, நமது எல்லாக் குடும்பங்களையும், குழுக்களையும் இல்லத்தில், பங்கில், மறைவட்டத்தில், மறைமாவட்டத்தில், கிராமத்தில், நகரில் திருஅவையாக, சமதர்ம சமூகமாக வளர்த்தெடுப்பதில் அனைவரும் கண்ணும் கருத்துமாய் விழிப்போடு இருப்போம். இன்றைய சூழ்நிலையில் குடும்பங்கள் சந்திக்கும் சவால்களுக்கு ஏற்ப போதுமான ஞானமும், விசுவாசமும் வளர்ந்திட ஒருவருக்கொருவர் உதவிட முன் வருவோம்.

**சாவல்கள்:** உலகம் ஒரு பெரிய குடும்பமாக இணைந்து ஒன்றுபட்டு வருவதால் பல நன்மைகளும் சவால்களும் நமக்குள் இடம் பெறுகின்றன. கடந்தகாலம், நிகழ் காலம், வருங்காலம் என்ற கருத்து மோதல்கள், மரபுவழி, மாற்றுவழி, புதுவழி, தனி வழி என பாதைகள் பெருக்கப்படுவதால் உயர்சாதி, சமசாதி, கீழ்சாதி என்று மோதல்கள் இடம் பெறுவதால், சுயநலம், ஆண்நலம், பெண் நலம் என்ற எதிர்போக்குகள் வளர்வதால், ஒன்றா, இரண்டா அல்லது மூன்றா நமது பிள்ளைகள் என்று பனிப்போர் எழுவதால், சீதனம், வீடு, கிராமம், நகரம் என்று புலம் பெயர்வதால், தியாக அன்பின்றி, மேலோட்டமான கவர்ச்சி இருப்பதால், படிப்பு, பணி, பணம் இவைகள் இடையே எழும் சிக்கல்களால், கூட்டுக் குடும்பமானாலும் தனிக் குடும்பமானாலும் எழுகின்ற பிளவுகளால், ஒரு குழந்தைக்குப் பிறகு ஏற்படும் இடைவெளிப் பிரச்சனைகளால், என்று இன்றைய குடும்பங்கள் இணைவதற்குமுன் ஒவ்வொருவரிடமும் பிளவுபட்ட நிலைமை இருப்பதால் குடும்பமாக வாழ்வது ஒருபெரும் சவாலாக இருக்கிறது. விசுவாசம் குறைவதால், உணர்வுகள், சிந்தனைகள் ஆட்சி செய்வதால் இணைவதற்கு இலேசான வாய்ப்புதான் இருக்கிறது. இந்நிலையில் பிள்ளைகள் எப்படிப்பட்டவர்களாக பெற்றெடுக்கப்படுவார்கள் என்று சிந்தித்தால் கண்ணீர் மல்கும், ஏன் திருமணம் என்ற வருத்தம் மேலெழும். இதனால் பிரிந்து வாழ்தல், தனித்து வாழ்தல், மணமுறிவு, பனிப்போர் என்று குடும்பங்கள் படும் உளைச்சலைத் தாங்க முடியாமல் கொலையும் தற்கொலையும் எளிதில் இடம் பெற வாய்ப்புகள் உண்டு. திருமணமில்லாத வாழ்வும் நிறைவாழ்வாகாது அல்லவா?

**பொறுப்புகள்:** இந்நிலைக்கு யார் காரணம் என்று ஒருவர் மீது ஒருவர் பழி சுமத்துவதைவிட அனைவரும் பொறுப்பேற்று நல்வழிப்படுத்த கூட்டு முயற்சியையும் செபத்தையும் மேற்கொள்வது முக்கியமாகும். கடவுள் ஒரு மாபெரும் மறைபொருள், எனவே நாம் ஒவ்வொருவரும் அந்த மறைபொருளின் பாகம் என்பதால் நாமும் ஒரு மறைபொருள். இம்மறை பொருளைத்தான் நாம் அன்றாடம் அவிழ்த்து வாழ்வை மணமுள்ளதாக வாழ அழைக்கப்படுகின்றோம். இவ்வாறு பலர் கடந்த காலத்தில் நமக்கு வாழ்ந்து காட்டி இருக்கின்றார்கள், நாமும் வாழ்ந்துகொண்டு வருகிறோம். வாழ்வை முழுவதுமாக வாழத்தான் இயேசு தன்னையே நமக்குக் கொடுத்து வாழ வைத்துக் கொண்டிருக்கிறார் என உணர்வோம்.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பதை ஆழமாக உணர்வோம். தாய் தந்தையைப் போற்று என்ற கற்பனையைக் காலமெல்லாம் கடைபிடிக்கக் கருத்தாய் இருப்போம். இன்றைய சூழலில் பெற்றோர்களைப் பிள்ளைகள் கண்காணிப்பது குறைந்து வருவது ஆரோக்கியமில்லாத பழக்கமாகும். எந்த அளவையால் அளக்கின்றோமோ, அதே அளவையால் அளக்கப்படுவோம் என்பதை மறந்துவிட வேண்டாம். பணத்தைவிட பண்பும், விடுதியைவிட வீடும் நமக்கும் நமது பெற்றோர்களுக்கும் மேலானது என்பதை புறக்கணிக்க வேண்டாம். சில நிரந்தரமான மதிப்பீடுகளை, காலத்தின் ஓட்டத்தில் கரைத்துவிட வேண்டாம், கல்லின் மீது அமைக்கப்பட்ட குடும்பமாய் விளங்கட்டும். நவீன சோதனைகட்கு நாம் இடம் தரக்கூடாது.

**உருவாக்கம்:** படைக்கின்றவரும் படைப்பும் நம்மில் இணைவதுதான் நாம் என்பதால், படைக்கின்றவர் தன்னை மூவொரு கடவுளாய், சத்சித் ஆனந்தமாய் அளிப்பதில் என்றும் எங்கும் யாரிலும் குறை இருக்க வழியில்லை. ஆனால் அதைப் பெறுகின்ற உடல் அமைப்பில்தான் பாதிப்புகள் இருக்க இடமுண்டு. அதை உருவாக்குவதிலும் இன்று பல தொல்லைகள் உண்டு. மனித மனம் குரங்கு என்பதை நாம் எண்பித்துக்கொண்டு வருகின்றோம். குழந்தை இல்லை என்று ஏங்குவோரும் உண்டு, ஏன் பிறந்தாய் மகளே, மகனே என்று வேதனைப்படுவோரும் உண்டு. கடவுள் அருளும் பொறுப்புகளை ஏற்றால் நல்லது.

இன்றைய உடல் அமைப்பும், உருவாக்கமும், கருதரித்தலும் எத்தகைய நிலையில் இருக்கின்றது என்று மருத்துவமனைக்குச் சென்றால் நாம் கண்டு உணர இயலும். இன்று கருவாவதும், உருவாவதும், பிறப்பதும்,வளர்வதும், இறப்பதும் மருத்துவமனையாகவே மருத்துவத் துறை மாற்றிக் கொண்டு வருகிறது. இக்கால மக்களும் அச்சத்தோடு அதற்கு உடன்படுகின்றனர். அன்று வீட்டு வைத்தியத்தில் எல்லாம் நன்றாக இருந்தது, இன்று ஆஸ்பத்திரி வைத்தியத்தில் பணமும் உயிரும் பணயம் வைக்கப்படுகின்றது என்பதை நினைத்தாலே பயமாக உள்ளது.

குழந்தைகளை கருவிலும், உருவிலும் வளர்த்தெடுக்கும் அன்புக் கலையை இன்றைய பெற்றோர்கள் மருந்துமீது சுமத்திவிட்டு பால்கொடுப்பதற்குக்கூட தயங்குகிறார்கள் என்றால், என்ன சொல்வது, யாரைச் சொல்வது என்று குழப்பமாக உள்ளது. நாம் எத்தகைய மனித இனத்தை நோக்கி பயணிக்கிறோம் என்பதை தெளிவாக, உறுதியாகக் கூற முடியவில்லை. பெற்றோரிடம் பிள்ளைகள் வளர்கின்றனவா அல்லது ஆயாக்களிடம் வளர்கின்றனவா என்பது ஒரு போராட்டமாக உள்ளது. இருவரும் வேலைக்குப் போகின்றார்கள், இருப்பதோ ஒன்று அல்லது இரண்டு பிள்ளைகள். இவர்களை உண்மையான அன்போடு வளர்த்தெடுக்க முடியவில்லை என்றால், பெற்றெடுத்ததையே நாம் கேள்விக்குள்ளாக்குகிறோம். கடவுள் பக்தியும் குறைவதால், பிள்ளைகளின் உருவாக்கம் மிகவும் பாதிக்கப்படுகிறது. இவைகளை ஒழுங்குபடுத்த சமூகம், சமயம், குருக்கள், துறவிகள் எவ்வளவுக்கு முனைப்பாக இருக்கின்றனர் என்பதும் கேள்விக் குறியாகிறது. விழித்தெழுந்து மனித மாண்பை கட்டி எழுப்ப சபதம் எடுப்போம், நிறைவேற்றுவோம். ●

---

**வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு :** சர்வவியாபி இதழில் மரித்தோர் நினைவு செபம் பதிவு செய்ய விரும்புவோர் குறைந்தது பத்து நாட்களுக்கு முன்பதிவு செய்து கொள்ள வேண்டுகிறோம்.

**2018-2019** சர்வவியாபி சந்தாவை புதுப்பித்துக் கொள்ளவும். MO செய்பவர்கள் **சந்தா எண்ணை** தவறாமல் குறிப்பிடவும். - ஆசிரியர்.



## இளையோரை... இறையாட்சிக்கு ஆற்றுப் படுத்துவோம்!! (சமூகப் பணி)

சென்ற இதழ் தொடர்ச்சி...

- வெட்டிவயல் வளவன்.

“உற்றநோய் கோன்றல், உயிர்க்கு உறுகண் செய்யாமை, அற்றே தவித்துக்கு உரு” என்ற குறள் கருத்து யேசு பிரான் ஒரு இளைஞனுக்கு கட்டளைகள் 10-ஐ கடைபிடிக்கச் சொன்னதில் அடக்கமாம். “தொழுகின்ற கை, துன்பம் துடைப்பவனின் தோழராக இருக்க வேண்டும்” சுந்தரர்வாக்கு. மன்றாடுவதிலும் தன்னலத்துக்கு வேண்டாவாம்; பிறர் நலம் கருதிய பிரார்த்தனையே வலிமை உடைத்து (புறம் 194). கூட்டு குடும்ப வாழ்வு சிதைந்து போன தால், மனித உறவும் சமூக பணிகளிலும் சிதைந்த நிலை. ஒரு சில மனித நேயரால் உலகம் இருக்கிறது - இல்லை அழிந்து விடும் என்பது பழம் பெரும் பாடலின் சீரிய கருத்து.

**நற்செய்திகாட்டும் சமூகப்பணி:** பொதுத் தீர்வை நாளில் ஒவ்வொருவரும் ஆற்றிய சமூக நல்லறப் பணிகள் தான் கணக்கிடப்படும். (மத்.25:35-40). இறைவன் நம்மை அபிசேகம் செய்ததின் நோக்கமே சமூக சேவை செய்யவே (லூக்.4:18,19) இளையோர் பற்றி நற்செய்தியில் பல நிகழ்வுகள் விரவிகிடக்கின்றன. சபை உரையாளர் 12:1; சீராக் ஞா. முழுதும் படியுங்கள் (குழந்தாய்...) திரு.பா.111:9; யோவே 2:8; 2அரசர்.22:1; 1சாமு.17:12; கலாத்.2:10; 3,28; 1கொரி.9:19-22; 2கொரி.3:17; பிலிப்பு 2:5-11, உரோமை. 16:1, 15:6 ......... படியுங்கள். வீறு கொள்ளுங்கள்.

“நான் உங்களிடம் அன்பு செலுத்துவதுபோல், நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள். நீங்கள் ஒருவர்க்குச் செய்யும் அன்பிலிருந்து (சேவை) நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லோரும் அறிவர் (லூக்.12:22-28) (யோ.13:34,35) (மாற்கு.1:27) - இவைகளை இளைய அரும்புகளே படித்துப் பணிபுரியுங்கள்.

உனக்குச் சொல்கிறேன் “உன் மீது நீ அன்பு கூர்வது போல உனக்கு அடுத்து இருக்கும் அயலானிடமும் அன்பு கூர்வாயாக” என்றார் இயேசு. அதற்கு அந்தப் பணக்கார இளைஞன், யேசுவின் மொழிகளை உள்வாங்கியதும், அவ்விடம் விட்டு நகர்ந்தான் என்பதை, மத்.19:16-30-ல் காண்கிறோம். சமூகப் பணிக்கு நல் மனது வேண்டும். சிறுமிக்கு உயிர் கொடுத்த நிகழ்வு (மாற்கு 5:41-43). “இளைஞனே! நான் உனக்குச் சொல்கிறேன். எழுந்திடு” லூக்.7:14 லும், சகோதரி தன் சகோதரன் மீது கொண்ட பரிவினால், யேசு இரங்கி, கல்லறையை விட்டு எழுப்பிய இளைஞனை (லாசர்) யோவான் 11:17-44) நிகழ்விலும் யேசுவின் பிறர் அன்புப் பணியை கண்டு மகிழ்கிறோம். இத்தகு சமூகப் பார்வை நமக்கு வேண்டுமே!

பல இளைஞர்கள் வாழும் சூழலில், தோபியாத் என்ற ஒரு இளைஞனைப் பார்க்கிறோம். தந்தையிடம் கற்ற சமயப் பற்று, பிறர்க்கு உதவும் நல்ல பண்பு, புலம் பெயர்ந்தார்க்கும், ஆதர வற்றார்க்கும், வாழ்வில்லார்க்கும், உதவும் பிறர் அன்புப் பணியை தம் தந்தையிடம் பெற்றான் (தோபியாத் 2:1-3). சமூகப் பணிக்காக தன்னை அர்ப்பணித்த அடுத்த இளைஞன். “சம்சோன்”. இவன் நீதித் தலைவன்; சோராவைச் சார்ந்தவன். “மனோவாகு” என்ற விவசாயின் மகன் (நீதி.13:2-9). நீண்ட நாள் பிள்ளைப் பேறு அற்றுப் பிறந்த மகன். 20 ஆண்டுகள் இசுரவேலர்களின் தலைவராக இருந்து பகைவர் பெலிஸ்தி யருடன் போரிட்டு வென்ற வீர இளைஞன். இவர்களைப் போன்று சமூக மாற்றுருவாக்கப் பணிக்கு தம்மை அர்ப்பணித்த பல இளைஞர்களைப் பார்க்கிறோம். “மோசே”, யாக்கோபு; யோசேப்பு, தாவீது, சாலமோன், கிதேயோன் போன்ற பலர். பவுலடியார் காலத்தில் லீதியா சிந்திக்கா, எயோதியா, பிரிஸ்கா போன்ற பல இளைஞி களைக் காண்கின்றோம். சமூகப் பணியில் உடன் உழைப்பது என்பது வீரியமிக்கது.

“சமுதாய பங்கேற்பு என்பது என் மனதுக்கு நெருக்கமான கருத்து. இயேசு அன்பு கூரந்ததுபோல, அன்பு கூர்தல் என்பது, தன்னலத்தில் இருந்து விடுபட்டு, பிறர்க்கே தொண்டு புரிந்து கொண்டிருப்பது. கிறித்தவரின் அன்பு, அன்றாடம் இரக்கச் செயலில் வெளிப்பட வேண்டும். **ஏழைகளே திருச்சபையின் சொத்து. சமூகத்தில் உரிமைகள் மறுக்கப்பட்டார் மீதும் ஒது(டு)க்கப்பட்டார் மீதும், அக்கறை இன்றி இருப்பது, கடவுளிடமிருந்து நம் பார்வையைத் திருப்பிக் கொள் வதற்கு ஈடாகும்.** எண்ணற்ற லாசர்கள் மீது நம் பார்வையை திருப்பிவிடுவோம்” என்றார் நம் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் (27-11-2016 நம் வாழ்வு).

**தொடரும்...**

91 இளம் உள்ளங்களுக்கு



## கடவுளுக்கு சேவை செய்திருக்கலாம்!

*– B.மேரி ராபர்ட் சாந்திதாஸ், புதுவை–1.*

**மெட்டாஸ்டாஸியோ** (Metastasio): “உயிரை பறிக்கும் வலிமை இம்மண்ணிலே பலரிடமும் பரவலாகக் காணப்படும் மிகவும் நெறிகெட்ட செயல்; உயிரை அளிக்கும் செயல் கடவுளுக்கு மட்டுமே உரியது.” யாருக்காவது தீங்கிழைக்க விழைந்தால் யோசி: ‘மனிதனால் உயிரை எடுக்க முடியுமே தவிர, கொடுக்க முடியாது.’

**மன்னனின் கவலை:** இங்கிலாந்தை ஆண்ட ஐந்தாம் சார்லஸ் மன்னன், ஒரு நாள் மிகவும் வருத்தத்துடனும் மனமுடைந்தும் காணப்பட்டான். அவனால் முழு மனதுடன் அரண்மனையின் அன்றாட அலுவல்களிலோ, அரசு சார்ந்த வேலைகளிலோ கவனம் செலுத்த முடியவில்லை. சுருங்க சொல்லின், அன்று அவன் அவனாக இல்லை. எப்போதை யும்விட முன்னதாகவே தன் அறைக்கு ஓய்வெடுக்க சென்றுவிட்டான். சிறிது நேரத்திற்கு பிறகு தன் தனி செயலரை அழைத்து தனக்கு மிகவும் நெருக்கமானவனும், விசுவாசமானவனும், தன் அரசின் மிக முக்கிய நபருமான வரின் உடல்நிலை பற்றி விசாரித்தான். அவனை பற்றிய தகவல் உடனே கிடைத்தது. அவன் உடல் நிலை திருப்திகர மாக இல்லை; மேலும், அதிக நாள் பிழைத்திருக்க வாய்ப்பில்லை.

**சந்திப்பு:** எந்த முன்னறிவிப்புமின்றி மன்னன் உடனே தன் நண்பனின் வீட்டிற்கு சென்றான். சாவின் விளிம்பில் இருந்த அந்த நண்பனின் வீட்டாருக்கும், நண்பர்களுக்கும் ஒரே ஆச்சரியம். உடனே அரசனை நோய்வாய்பட்டிருந்த அந்த மனிதனின் அறைக்கு அழைத்து சென்று அவனுடன் தனியாக பேச அனுமதித்தார்கள். மன்னன் தன் நண்பனின் தலைப் பக்கமாக சாய்ந்தவண்ணம், “அருமை ஆருயிர் நண்பா, எப்படி இருக்கிறாய்?” என்று மிகுந்த அக்கறையுடன் உணர்ச்சி மேலிட்டவனாக கேட்டான். அவன் நண்பன் தாழ்ந்த குரலில் மெதுவாகவும், மிகுந்த சிரமத்துடனும், “நான் நன்றாக இல்லை, மன்னா!” என்றான். அரசன், அவன் நண்பனுக்கு தைரியம் சொல்லும் வண்ணமாக, “நீ சீக்கிரமே குணமாகிவிடுவாய், உனக்கு நான் என்ன செய்யவேண்டும், சொல்” என்றான். நண்பன் மன்னனை உற்று நோக்கி, “நான்... வாழ..... இன்னும் ஒருநாள்....” என்றான். மன்னன் அதற்கு மறுமொழியாக, “நண்பா, அது கடவுளால் மட்டும்தான் முடியும்” என்றான். இறந்து கொண்டிருந்த நண்பன் கடைசி யாக, “அதற்கு, நான் கடவுளுக்கு சேவை செய்திருக் கலாமே!” என்றான்.●



# நற்கருணை - தியாகத்தின், இரக்கத்தின், அடையாளம்.

சிந்தனைச் செல்வர், பேராசிரியர் அ.குழந்தைராஜ்-காரைக்குடி

நற்கருணை தியாகத்தின் அடையாளம் தம் நண்பர்களுக்காக தன் உயிரைக் கொடுப்பதைவிட மேலான தியாகம் எது? என்கிறார் இயேசு. நற்கருணை திருவருட்சாதனங்களின் திருவருட்சாதனம். இதிலிருந்து பிறந்தவைதான் பிற அருட்சாதனங்கள் கிறிஸ்துவின் பாடுகள், இறப்பை நினைவு படுத்துபவை. நற்கருணை இயேசுவின் தியாகத்தின் உச்சகட்டம். இது தியாகமும் திருவருட்சாதனமும் இணைந்தது. மனிதன் திருவருட்சாதனங்களைப் பெறுகிறான். இறைதந்தை பலியை ஏற்றுக் கொள்கிறார்.

தியாகம் என்றால் என்ன? தியாகம் என்பதின் பொருள் 'புனிதப்படுத்துதல்' என்பதாகும். ஒரு பிள்ளையைப் பெற்றெடுத்த தாய், தியாகவாழ்வு வாழ்கிறார். போர்வீரன் ஒருவன் நாட்டுக்காக தன் உடல், பொருள் உயிரைத் தியாகமாகக் கொடுக்கிறார். கடவுளின் மாட்சி மைக்காகவும், பாவங்களிலிருந்து மன்னிப்பு பெற்றதாலும் நன்மைத் தனங்களைப் பெற்றதற்காகவும், இனியும் பெறப் போகின்ற அருளுக்காகவும் மனிதன் ஒருவன் கடவுளைப் போற்றுகிறான்.

காயீன்,ஆபேல் பலி கொடுத்தனர். நோவா நன்றிப்பலி செலுத்தினார். பிதாப்பிதாக்கள் ஆபிரகாம், ஈசாக்கு,யாக்கோபு ஆகியோர் ஆரோன்,மெல்கிசெதேக் மூலம் பலி செலுத்தினர்.

விசுவாசிகள் கூடி ஜெபிக்கும் திருப்பலி மூன்று முக்கிய பகுதிகளை கொண்டது. 1) மக்களின் அர்ப்பணம் மற்றும் காணிக்கை 2) அப்பமும் ரசமும் வசீகரிக்கப்பட்டு, இயேசுவின் உடலாகவும் இரத்தமாகவும் மாறும் திருவருட்சாதனம் மற்றும் திருவிருந்து 3) அந்தத் திருவிருந்தில் பங்குபெறும் குருவானவரும் இறைமக்களும் இவையனைத்தும் கிறிஸ்துவின் பாடுகளை நினைத்து இறைமக்கள் தங்கள் பக்தி முயற்சிகளையும் வணக்கத்தையும் செலுத்துகின்றனர். இந்த திருப்பலிக் கொண்டாட்டத்தின்போது மனித முறையில் சில சடங்குகளிலோ சில வார்த்தைகளை உச்சரிப்பதிலோ, அப்பம் இரசத்தில் ஏதேனும் மாசு இருந்தாலும், ஆண்டவரின் அருளும், குருவின் வசீகரமும், இறைமக்களின் விசுவாச அடையாளங்களும் திருவிருந்தின் புனிதத் தன்மையை பாதிக்காது.

திருவிருந்தில் பங்குகொள்ளும் நாம் இயேசுவின் உடலாக மாற்றம் பெறுகிறோம். எப்படி சிறிதளவு புளிப்பு மாவு, மாவு முழுவதையும் புளிப்பேற்றுகிறதோ அதைப்போல நற்கருணையும் செயல்படும். இதே இறையுணர்வில் மனிதன் தெய்வநிலைக்கு உயர்த்தப்படுகிறான். எப்போது பாவம் அவனைப் பற்றிக் கொள்கிறதோ அப்போது அவன் கடவுளிடமிருந்து தன்னை அந்நியப்படுத்திக் கொள்கிறான்.

திருவிருந்தில் இயேசுவோடு ஒப்புரவாகிறான். நொறுங்குண்ட இதயத்தோடு தம்மைத் தாழ்த்தி நற்கருணை உட்கொண்ட ஒருவனுக்கு இறைவனின் அருள் ஏராளமாக சுரக்கிறது. இறைவன் அவனின் பாவங்களை மன்னித்து ஏற்றுக் கொள்கிறார். இறைவனும் மனிதனும் இயேசுவில் இரண்டறக் கலக்கிறார்கள். அருளும், அறமும் பெருகி வழிந்தோடுகின்றன. மிருக நிலை மனிதன் தெய்வ நிலைக்கு உயர்த்தப்படுகிறான். ●

## தூய பேதுரு விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி-175
### மார்ச் மாத போட்டியின் முடிவுகள்

***விவிலிய பகுதி: யோவான் நற்செய்தி***

**குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 10 பேர்.**

1) R. ஆல்பர்ட் ஜோ - சிவகாசி மேற்கு, 2) விவியான் இருதயராஜ் - பெரும்பண்ணையூர், 3) கிரிஜா புரோஸ்பர் - பெருபண்ணையூர், 4) Sr. எலிசாமேரி -காக்கயாந்தோப்பு, 5) S. பேர்க்மான்ஸ்மேரி Tr. - மங்கலம்பேட்டை, 6) N.P. ஆரோக்கியமேரி பீட்டர்- C. நம்மியந்தல் 7) C. மேரி ஜோஸ் - பெரியகொடிவேரி, 8) Sr. ஞானதீபம் - மரியபுரம், 9) G.மகிமைதாஸ் - மார்ட்டள்ளி, 10) சத்தியநாதன் ஜூலியட் - காரைக்கால்.

***சரியான பதில்கள்:***

**இடமிருந்து வலம்**

| | |
|---|---|
| 1.கடவுளை | (யோ.1:18) |
| 3.சீடரும் | (யோ.2:11) |
| 4.தண்ணீர் | (யோ.3:23) |
| 5.மகனிடம் | (யோ.3:26) |
| 8.உருவை | (யோ.5:37) |
| 9.எவரும் | (யோ.7:13) |
| 16.கனி | (யோ.15:2) |

**மேலிருந்து கீழ்**

| | |
|---|---|
| 1. கண்டதை | (யோ.3:11) |
| 2. நான்தான் | (யோ.18:5) |
| 8. உலகுக்கு | (யோ.7:4) |
| 9. என்னை | (யோ.8:29) |
| 10. வருவர் | (யோ.10:9) |
| 12. ஆயரும் | (யோ.10:12) |
| 19. நேரம் | (யோ.17:1) |

**வலமிருந்து இடம்**

| | |
|---|---|
| 2. நானும் | (யோ.1:34) |
| 7. நிலைவாழ்வை | (யோ.6:47) |
| 11. எனக்கு | (யோ.8:54) |
| 12. ஆறாய் | (யோ.7:38) |
| 16. கல்லறை | (யோ.19:41) |
| 17. நம்பிக்கை | (யோ.9:35) |
| 20. கைதியை | (யோ.18:39) |
| 21. குடம் | (யோ.2:6) |

**கீழிருந்து மேல்**

| | |
|---|---|
| 4.தண்டனை | (யோ.5:24) |
| 5.தனியாய் | (யோ.6:15) |
| 6.காலம் | (யோ.4:23,5:25;16:32) |
| 7.நிலைவாழ்வு | (யோ.4:36) |
| 10.வலையை | (யோ.21:6) |
| 13.பொருட்டு | (யோ.12:30) |
| 14.தந்தையிடம் | (யோ.14:6) |
| 15.தலையை | (யோ.13:9) |
| 22.இனி | (யோ.14:30) |
| 18.எங்கே | (யோ.12:35) |

**பாராட்டும், இறை ஆசீரும் பெறுபவர்கள்:** மதியழகி–ஈரோடு, Sr. செசீலி–வாலகிரி, J. சூசன்னாள்–தூத்துக்குடி, I.R.எட்மெண்ட்– காளையார் கோவில், L. ஆரோக்கியமேரி, Sr.மேரி லிடியா–பள்ளபாளையம், A. மரிய கிறிஸ்துராஜ் Rtd.H.M, A.உபகாரசாமி Tr, R. லூக்காஸ், L.லிட்டில் ப்ளவர்–விழுப்புரம், S.B.தெரசா ரீத்தா பெஞ்சமின், K.L. இஸபெல்லா லூர்துராஜன், N.P. ஆரோக்கியமேரி பீட்டர், Y.A. லில்லி– C. நம்மியந்தல், S. புஷ்பமேரி, மேரி லொயலா திவ்யநாதன், Sr சகாயராணி SJC, A.C. பிலோமினா அகஸ்டஸ் – கடலூர், பிலிப் பீட்டர் ஜான் மலையப்பா, F.கிளாரா மேரி Tr– வன்னியர்பாளையம், ரோசாலி மேரி Rtd.Tr, S. அமல்ராஜ்–வடலூர், S. கமலம், R. ராபின் கிரேஸிமேரி–திருச்சி, பிலோமினா சத்தியநாதன், N. ஜோசப்பீன் வசந்தி, J.ராஜாபாக்கியம்–தேனி, Sr அமலோற்பவமேரி–எறையூர், S. ஆரோக்கியமேரி–ஆலங்குடி, S.G.ஜோசப்ராஜ் மாணிக்கம், M.செபாஸ்டியான்–மதுரை, Sr.இன்னொசென்சியாமேரி–ஓமலூர், C.மேரிஜோஸ்–பெரியகொடி வேரி, A.ஜோசப் அருள் சவரிநாதன், J. நோயல் அருள்தாஸ்–திருவாக்கவுண்டனூர், A. மரிஸ்டெல்லாராஜ்–முருங்கபாக்கம், P.மரிய சகாய செபஸ்டின்–போளூர், S. ஆரோக்கியமேரி, R. ஹெலன், செல்வராயன் மரி செலீன், G. அந்தோணி Rtd.Tr, A. மேரி அமலதாஸ், A. சுசிலாராஜ், A. ஸ்டெல்லா ராணி Tr–நெல்லிதோப்பு, Sr. ப்ளோராட்மேரி, I. ஆரோக்கியசாமி–உளுந்தூர்பேட்டை, M. ஜெயராஜ்–பசுபதிபாளையம், S. தனசீலி, A. மரியப்பன் Rtd.Tr–விரியூர், Sr. ஞானதீபம்–மரியபுரம், D. பெலிக்ஸ் அகஸ்டஸ் – கோவை, Sr. மேரி புஷ்பம்–முகையூர், K.மேரி கிளாரா Rtd.Tr– மேல்சித்தாமூர், S.L. மரியதாஸ், நிர்மலா, P. சின்னப்பராஜ், A.பெரியநாயகமேரி–நெய்வேலி, S. ஹென்றிதாஸ்–வடக்குத்து, S. சவரிமுத்து Rtd.M.T., சாந்தா – சாத்திப்பட்டு, S. ஜேசுமணி–கைலாசபுரம், A. அல்போன்ஸாமேரி Rtd.Tr, S. சந்தியாகு Rtd.H.M.–நாரணம்பாளையம், மாதரஸி ஜோசப்–உப்பளம், S.ஆனி சுசான் சாந்தி, ஷீலா விக்டர், D. உபகாரமேரி–புதுவை, G.மார்செலீன்மேரி– நாகர்கோவில், டெய்ஸி அமல்ராஜ்–அமிந்தகரை, R. உத்திரியமேரி Rtd.Tr–வடக்குச் செய்யூர், பெரியநாயகம் ஸ்தனிஸ் – அணையேரி, C. பவுலீன் சூசைநாதன் Rtd. Tr.–மதுராந்தகம். ஜோஸ்பீன் வர்க்கீஸ், B. மரி தெரேஸ் – ரெட்டியார்பாளையம், Sr.மேரி லிடியா – சேலம், Sr. பாஸ்கல்மேரி, Sr. மேரி ஸ்டெல்லா, Sr. மேரி கபிரியேல்–கும்பகோணம், Sr.ஜோவித்தாமேரி–புதுப்பாளையம், N.லூர்தஸ்–மாடம்பாக்கம், A. அருமைராஜ்–காந்தி கிராமம், Sr. எலிசாமேரி–காக்காயந்தோப்பு, S. சூசைஅருள்–K.புதூர், A. பிரான்சிஸ் அலோசியஸ்– K.K.நகர்., S.அருள்ராஜ்–மடிப்பாக்கம், ரோசாலி நீதிதாஸ்–நெடுங்காடு, சத்தியநாதன் ஜூலியட்–காரைக்கால், D. பெலிக்ஸ் ஜோஸ்பீன்–காந்திபுரம், M.மோட்சமேரி Rtd.Tr, S. செல்வி எமல்டாமேரி, மதலை இருதயமேரி–சேலம் கேம்ப், விவியான் இருதயராஜ், கிரிஜா புரோஸ்பர், ரோஸ்லீன் சார்லஸ்– பெரும் பண்ணையூர், S. அமலி Tr – இராயப்பன்பட்டி, ஞானம் சவரிராஜ்–பெரியவர்சீலி, ரெஜினா ராபின்–வெலிங்டன், S. அப்போலினியஸ்–தக்கலை, C.குப்புசவரி Rtd.H.M.– V.பாஞ்சாலம், J.ரெபேக்காள் அன்னபாக்கியம்–முத்தையாபுரம், Sr. ஹெய்சிந்–சாந்தோம், F. ஜெஸிந்தா–கொடுங்கால், Sr. ஜூலியானா, Sr. பெஞ்சமின், Sr. ஜூலி எலிசபெத்–மாதாக் கோட்டை, G. மகிமைதாஸ்–மார்ட்டள்ளி, P. விஜயக்குமார்–லாஸ்போட்டை, Sr. மௌரீன்மேரி–தொண்டமானத்தம், Sr.விரோணிக்கம்–கிருஷ்ணாபுரம், A.ஜோசப்–பெங்களூர், Sr.A.சிறிய புஷ்பம்–புதுவை, D.தனராஜ்–பெரியகொடிவேரி, Sr. ஆரோன் மரியசூசை–கரையான்புதூர்

தொடரும்...



# உலக மீட்பர் காப்பியம்



பேராசிரியர், முனைவர். ***ச.சாமிமுத்து,*** திருச்சி.

## 20ஆம் படலம்

ஆண்டவர் மோசேயை நோக்கி, எகிப்து நாடெங்கும் – எகிப்து நாட்டிலுள்ள மனிதர், விலங்கு, வயல் வெளியிலுள்ள பயிர் பச்சை இவற்றின்மேல் – கல்மழை பொழியுமாறு உன் கையை வான்நோக்கி நீட்டு என்றார். மோசே தம் கோலை வானோக்கி நீட்டவே, ஆண்டவர் இடிமுழக்கங்களையும், கல்மழையையும் அனுப்பினார். நிலத்தில் நெருப்புப் பாய்ந்து வந்தது. எகிப்து நாடெங்கும் கல்மழை பெய்வித்தார் ஆண்டவர். கல்மழை பெய்தது – விப.9:22–24.

**31 விப 9:26 இஸ்ரேயல் மக்கள் தங்கியிருந்த கோசேன் நிலப்பகுதியில் மட்டும் கல்மழை பெய்யவில்லை.**

குடைபிடித்தே காப்பவராய்க் கடவுள் யாவே,
கொண்டணைப்பில் வைத்தேதம் மக்கள் காத்தார்!
படைநடுவே தம்மரசன் குடும்பம் தன்னை,
பகைவரது தாக்குதலுக் கட்ப டாதே
நடைபெறும்ஓர் போர்க்களத்தில் படைகள் காக்க,
நற்குடும்பம் இருப்பதைப்போல் இசுரேல் மக்கள்,
உடைகூட நனையாமல் கோசேன் மண்ணில்
உலவிட்டார்! கல்மழையைக் காணா தன்னார்!

**32 விப3:19-20 "என் கைவன்மையைக் கண்டாலன்றி, எகிப்திய மன்னன் உங்களைப் போகவிடமாட்டான் என்பது எனக்குத் தெரியும். எனவே என் கையை ஓங்குவேன். நான் செய்யப்போகும் அனைத்து அருஞ்செயல்களாலும் எகிப்தியனைத் தண்டிப்பேன். அதற்குப்பின் அவன் உங்களை அனுப்பி விடுவான்." இது யாவே கடவுளின் எச்சரிக்கை!**

ஆண்டவரின் அருங்குறியாய் இசுரேல் மக்கள்
அவருடைய பேரருளின் பாது காப்பால்,
ஆண்டந்த நாட்டினது கோசேன் தன்னில்
அவதியுறா திருந்ததுவும் பெரும்வி யப்பே!
பூண்டோடு அழிப்பதைப்போல் எகிப்தில் எங்கும்
பொழிந்தோயாக் கல்மழையைக் கண்டான் பார்வோன்!
மூண்டெழுந்த யாவேயின் எதிர்ப்பை ஆய்ந்து
முன்கொண்ட தன்முனைப்பை மாற்றிக் கொண்டான்!

**33 பார்வோன் யாவேயின் ஆற்றலின் மேன்மையை உணர்ந்து மிகுந்த அச்சமுற்றான். மோசேயின் கூற்றுப்படி கல்மழை கனமாய்த் தொடர்ந்து பொழிந்தது!**

நெஞ்சுயர்த்தி, யாவேயின் ஆற்றல் தன்னை
நிலையில்லா ததுவென்றே நினைத்த மன்னன்,
விஞ்சுகிற கல்மழையின் வேகங் கண்டு
வியந்ததிகம் பயந்திட்டான்! ஒன்றாய் நாடே
மிஞ்சாது பாழ்பட்டு அழியும் என்றே,
மேனியுடன் உளம்நடுங்கி ஓய்ந்து ழன்று,
கெஞ்சுகிற நிலைவந்து மருட்டு தென்றே
கிலிபிடித்து, மோசேசொல் நினைத்துச் சோர்ந்தான்!

**34 விப 9:27 பார்வோன் மோசேயை அழைத்து, "நான் இம்முறை பாவம் செய்துவிட்டேன்; ஆண்டவரே நீதியுள்ளவர். நானும் என் மக்களும் தீயவர்" என்றான்.**

கொட்டுகின்ற கல்மழையைக் கூர்ந்து பார்ந்து,
கொடிமின்னல் வெட்டுடனே இடிஇ டிக்க,
கெட்டழிந்து விளைநிலங்கள் சிதையு மாறே
கிளர்ந்தெழுந்து நிலமெங்கும் நெருப்புப் பாய,
பொட்டிழந்த பூவிழந்த கைம்பெண் ணாகப்
போகிறதே தன்னாடே என்றே அஞ்சி,
மட்டில்லாச் சோகத்தில் மூழ்கிப் பார்வோன்,
மனமாற்றம் கொண்டழைத்தான் மோசே தன்பால்!

**35 யாவே கடவுளே விண்ணையும் மண்ணையும் அவற்றில் உள்ள அனைத்தையும் படைத்து, ஆண்டு நடத்தும் ஒரே கடவுள் என்பதை உணராமல் அவர் ஆணைக்குப் பார்வோன் கீழ்ப்படிய மறுத்தான். அவனாகட்டும், வேறு எவராகட்டும் அவரை எதிர்ந்து உலகத்தில் அழிவுறாது இருப்பவன் யார்?**

இப்படியோர் நிலைவரவே கண்டான் பார்வோன்!
என்செய்வான்! இறையெதிர்ந்து நிற்பார் யாரே?
செப்படிபல் வித்தைகளைச் செய்தே தேவன்
சிறுமையுறச் செய்திடலாம் என்றே எண்ணும்
தப்புள்ளம் கொண்டவராய், கடவுள் கொள்ளும்
தளர்வில்லா வெஞ்சினத்திற் கெதிராய் நின்றே,
இப்புவியில் நெஞ்சுயர்த்த வல்லார் யாரே?
இ∴தறியார் கதியறிவோம், காணோம் அன்னார்!

தொடரும்...

# அதிக கோபம் நோயின் அறிகுறி

–G. ***பொனிபாஸ் ஜூலியன்,*** புதுவை–9.



**நா**ன் சாதாரணமாக மாலையில் அலுவலகத்திலிருந்து வீடு திரும்பி வரும்போது, என்னுடைய பிள்ளைகளுக்கு ஏதாவது திண்பண்டம் வாங்கி வருவது ஒரு பழக்கம். நான் குறிப்பாக ஒரு கடையை தேர்ந்தெடுத்து அங்கு கார வகைகள் உதாரணத்திற்கு பகோடா, மிக்சர், முறுக்கு போன்றவற்றை வாங்குவேன். அந்த ஒரு குறிப்பிட்ட நாள், நான் அந்த கடைக்கு சென்ற போது அந்தக் கடை மூடி இருந்தது. என்ன செய்வது, சிறிது தூரம் தாண்டி பழக்கமில்லாத அந்த கடைக்குச் சென்று மிக்சர் வாங்கிக் கொண்டு வீடு திரும்பினேன். என் பிள்ளைகள் அந்த மிக்சரை சுவைத்து விட்டு இது வேறு கடையில் வாங்கப்பட்டது என்று சொன்னார்கள். எனக்கு ஆச்சரியம். இதனுடைய சுவை எப்படி என்று கேட்டேன். அவர்கள் கூறியது: "மிக்சர் பழையது, பழைய எண்ணெயில் செய்யப்பட்டது நன்றாக இல்லை" என்று கூறினார்கள்.

இதை நான் ஒரு பெரிய தவறாக ஏற்கவில்லை. மறுநாள் அதே கடைக்கு சென்று அந்த உரிமையாளரை அழைத்து, யாருக்கும் கேட்காமல், நேற்று வாங்கப்பட்ட மிக்சரின் தரத்தை கூறிவிட்டு வருங்காலத்தில் சிறப்பாக தயார் செய்ய ஆலோசனை கூறினேன். இது எனக்கும் அவருக்கும் நடந்த ரகசிய உரையாடல். இதை அவர் கேட்டு விட்டு, சரி சார், நாளை முதல் இவ்விதமான தவறு நடக்காது என்று கூறியிருக்கலாம். அதைவிடுத்து, எல்லோர் முன்னிலையிலும் என்னை அவமானப் படுத்தும் விதமாக அவர் கூறிய வார்த்தைகள் என்னை மனம் நோக செய்துவிட்டது. அவர் கூறினார், என் கடையில் விற்கப்படும் அனைத்து பொருட்களும் பழையது. நீங்கள் வேறு கடைக்குச் சென்று பிரஷ் ஆக வாங்கிச் செல்லலாம் என்று கூறி என் பணத்தை திருப்பி என்னிடம் தந்துவிட்டார். இந்த நிகழ்ச்சி நடந்து ஏறத்தாழ பத்து நாட்கள் ஆகி இருக்கும். அவர் கூறும்போது மிக கோபமாக இருந்ததை நான் உணர்ந்தேன். இதற்கு போய் ஏன் இவ்வளவு கோபம் என்று நினைத்து சிந்தித்து கொண்டு வந்தேன்.

ஒருநாள் காலை 10 மணி இருக்கும். நான் பணிபுரிகின்ற மருத்துவமனையில் ஒருவர் என் அருகில் வந்து, சார் என்று கூப்பிட்டார். திரும்பிப் பார்த்தேன். அந்த மிக்சர் வாங்கிய கடை ஓனர். அவருக்கு என்னை அடையாளம் தெரியவில்லை. நான் அவரை அடையாளம் கண்டுகொண்டேன். உங்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்டேன். அவர் கூறினார், "உங்களிடம் பணிபுரிகின்ற என் மகளை சிறிது நேரம் என்னை OPD க்கு அழைத்து செல்ல அனுமதி தாருங்கள் ஏனெனில் நான் சில நாட்களாக இதய வலியினால் கஷ்டப்பட்டு கொண்டு இருக்கிறேன். உடனே நான் அவர் மகளை அழைத்து அப்பாவுக்கு உதவி செய்யுமாறு அனுப்பி வைத்தேன். ஏறக்குறைய ஒரு மணி நேரம் கழித்து என்னிடம் நன்றி கூற வந்தார். நான் அவரிடம் நீங்கள் **மருத்துவமனைக்கு விரைவில் வருவீர்கள் என்று முன்கூட்டியே எனக்குத் தெரியும்.** உங்களிடம் தேவையற்ற அதிகப்படியான கோப உணர்வுகள் இருக்கிறது. இதை நான் சில தினங்களுக்கு முன் வந்தபோது தெரிந்துகொண்டேன். பழைய செய்திகளை அவருடைய நினைவுக்கு கொண்டு வந்தேன். அதை கேட்ட அவர் அதிர்ச்சி அடைந்து தன்னை மன்னிக்குமாறு கேட்டு கொண்டார். நான் சொன்னேன் மன்னிப்பதற்கு ஒன்றும் இல்லை, நீங்கள் உங்களையே மனமாற்றம் செய்யுங்கள் என்று கூறி அனுப்பி வைத்தேன்.

சிலருக்கு அப்படித்தான், எதற்கெடுத்தாலும் கோபம். அதை அவர்கள் பெருமையாக கருதுகிறார்கள். வீண் கோபத்தால் அதிகப்படியான நோய்கள் தங்களை தாக்கும் என்பதை உணர்வதில்லை. கோபம் வரும்போது நிதானத்தை இழக்க நேரிடும். மிருகம் தான் அதிகப்படியான கோபப்படும். கடவுள் சாயலாக படைக்கப்பட்ட நமக்கு ஏன் கோபம் சிந்திப்போம்! செயல்படுவோம்! ●

# பேறுபெற்ற திருத்தூதர் பேதுரு

- A.K. அகஸ்டின், ஆசிரியர் ஓய்வு, *சேலம்.*

**அறிமுகம்:** உலகில் பல தலைவர்கள் மக்களால் தேர்ந் தெடுக்கப்படுகின்றனர்; இன்னும் சிலர் பாரம்பரிய தலைவர் களாக உள்ளனர். ஆனால் இறைவனால் தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் முதுபெருந்தந்தையராவர். இறைமகன் இயேசு வால் திருத்தூதர்களில் முதன்மையானவராக தேர்ந் தெடுக்கப்பட்டவர் பேதுரு ஆவார். இறைமகன் இயேசுவால் ஏற்படுத்தப்பட்ட திருச்சபைக்கும் அவரே முதல் தலைவர். பாப்பரசர்கள் அனைவருமே அவருடைய வாரிசாக சத்திய திருச்சபையின் தலைவர்கள் என சிறப்பு பெற்றுள்ளனர். இவரின் தனிச் சிறப்புகள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.



**மீன் பிடிப்பவர் மனிதரைப் பிடிப்பவரானார்:** பேதுரு என்றும் இராயப்பர் என்றும் சீமோன் என்றும் பீட்டர் என்றும் கிருஸ்தவரால் அழைக்கப்படும் இவர் கற்றறிந்த மேதை அல்ல. மாபெரும் பதவி வகித்தவர் அல்ல. அல்லது பெருஞ்செல்வம் படைத்தவர் அல்ல. பாரம்பரிய புகழ் பெற்றவருமல்ல. ஆம்! அவர் மீன் பிடித்து பிழைத்த அன்றாடம் காய்ச்சியாவார். ஆண்டவர் அழைத்த உடனே வலைகளை விட்டுவிட்டு அவர் வழி சென்றவர். நல்ல ஆயனின் ஆடுகளை மேய்க்கும் மேய்ப்பரானார்.

**பேறுபெற்ற பேதுரு:** கிரேக்க மொழியில் “பேத்ரோஸ்” என்றும், இலத்தீன் மொழியில் “பெத்ரூஸ்” என்றும் ஆங்கில மொழியில் “பீற்றர்” என்றும் பொருள்படும் சொற்கள் தமிழ் மொழியில் பாறை என வழங்கப்படுகிறது. இறைமகன் இயேசு வுக்குப் பதிலாக மக்களுக்கு காணப்படும் பிரதிநிதியாக இராயப்பர் விளங்கப்போவதால் “உன் பெயர் பாறை. இந்த பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன்” என்று சொல்லி இராயப்பரை திருச்சபையின் தலைவராக்கினார். ஏனெனில் பேதுரு “நீர் மெசியா, உயிருள்ள கடவுளின் மகன்” என்று கூறி இயேசுவை தெய்வத் திருமகன் என ஏற்றுக் கொண்டு இயேசுவால் “பேறுபெற்றவன்” என புகழப்பட்டவர்.

**தத்தளித்து தடுமாறிய தலைவன்:** ஆண்டவர், பேதுரு தன்மீது கொண்டிருந்த ஆழ்ந்த பற்றை அறிந்திருந்தார். ஆயினும் அவ்வப்பொழுது பேதுரு நிலை தடுமாறி விடுவார் என்பதையும் ஆண்டவர் அறிவார். கடல்மீது நடந்த தெய்வத் திடம் “நானும் கடல்மீது நடந்து உம்மிடம் வரக்கட்டளை யிடும்” என்று தன் விருப்பத்தை பேதுரு தெரிவிக்க, அவரும் “வா” என்றார். கடல்மீது நடந்து துணிந்து வரும்பொழுது பலத்த காற்றைக்கண்டு அஞ்சியவராய், “ஆண்டவரே என்னைக் காப்பாற்றும்” என்று அலறினார். நம்பிக்கைகுன்றிய பேதுருவை இயேசு கடிந்து கொள்கிறார்.

**தரிசனங்கண்ட தவப்புதல்வன்:** பழைய ஏற்பாட்டு காலத்தில் மலைமீது இறைபிரசன்னத்தை முதுபெரும் தந்தையர் காணும் பேறு பெற்றனர். புதிய ஏற்பாட்டு காலத்தில் பேறு பெற்றுள்ள அப்போஸ்தலர் பேதுருவும் அவருடன் யாகப்பரும், அருளப்பரும், கதிரவனைப்போல ஒளி பிரகாசிக்கும் முகத் தோற்றத்தை உடைய இறைமகன் இயேசுவை மலையில் கண்டனர். ஒளிரும் மேகம் ஒன்று நிழலிட “இவரே என் அன்பார்ந்த மகன்! இவரிடம் நான் பூரிப்படைகிறேன். இவருக்கு செவிசாயுங்கள்” என்ற குரலொலி மேகத்தி லிருந்து ஒலித்து, இயேசு மெய்யான தெய்வம் என சான்று பகன்றது. இந்த ஒப்பற்ற நிகழ்வுக்கு தாம் எழுதிய இரண்டாம் திருமுகத்தில் முதல் அதிகாரத்தின் 16ஆம் வசனத்தில் சாட்சி பகர்கிறார். இறைமாண்பை நேரில் கண்டதாகக் கூறுகிறார்.

**மெய்யான குடிமகன்:** மெய்யான குடிமகனாக ஒருவன் எவ்வாறு விளங்க வேண்டும் என்பதை ஆண்டவர் பேதுரு வழியாக உணர்த்துகிறார். இயேசுவிடம் வரிப்பணம் செலுத்துவது பற்றி கேட்டபொழுது தூண்டில் போட்டு, முதலில் படும் மீனை எடுத்து, நாணயத்தை அதன் வாயிலிருந்து எடுத்து, இயேசுவுக்காகவும் பேதுருவுக்காகவும் செலுத்தும்படி சொல்ல, பேதுருவும் அவ்வாறே செய்து, மெய்யான குடிமகன் எவ்வாறு செயல்பட வேண்டுமென கற்றுக்கொண்டார்.

**மன்னிக்கும் மனப்பான்மை:** சகோதரன் குற்றஞ்செய்தால் “ஏழுமுறை என்றன்று; எழுபது ஏழுமுறை” என்று இயேசு பேதுருவுக்குக் கூறி, பேதுருவுக்கு மன்னிக்கும் மனப்பான்மையை உணர்த்தினார்.

**பற்றற்றவருக்கு பரிசு:** “என் பின்னே வாருங்கள்” என்ற உடன் அனைத்தையும் விட்டுவிட்டு ஆண்டவரை பின்பற்று பவனுக்கு என்ன கிடைக்கும்? என்று பேதுரு கேட்டபொழுது, ஆண்டவரின் பெயரின் பொருட்டு அனைத்தையும் துறந்து விடும் எவனும் பன்மடங்கு பெறுவான் என இயேசு பேதுருவுக்கு உறுதி அளிக்கிறார்.

**குருவை மதித்த சீடர்:** யாரிடமும் இல்லாத வாழ்வு தரும் வார்த்தைகள் இயேசுவிடமே உள்ளன என்ற அசையாத நம்பிக்கை கொண்டவர் பேதுரு. இயேசு சீடர்களின் பாதங்களைக் கழுவிக் கொண்டிருந்தபொழுது பேதுருவிடம் வந்தார். “ஆண்டவரே, நீரா என் பாதங்களைக் கழுவுவது” என்றார். அது மட்டுமன்று “ நீர் என் பாதங்களை ஒருபோதும் கழுவவிடமாட்டேன்” என்று தடுத்தார். ஆனால் இயேசு கடிந்து கொண்டபொழுது அதற்கு உடன்பட்டார்.

**மறுதலித்த திருத்தூதர்:** “எல்லாரும் உம்மைக்குறித்து இடறல்பட்டாலும், நான் ஒருபோதும் இடறல்படேன்” என்று உறுதி அளித்த பேதுரு, இயேசு மரணத்துக்குக் கையளிக்கப் பட்ட நேரத்தில், ஒரு வேலைக்காரிக்குப் பயந்து “அந்த ஆளை எனக்கு தெரியாது” என்று ஆணையிட்டு மறுத்தார். அந்த நேரம் கோழி கூவ “இன்றிரவே கோழி கூவுமுன் என்னை மும்முறை மறுதலிப்பாய்” என்று இயேசு கூறியதை நினைவுகூர்ந்து, வெளியே சென்று, மனம் வெதும்பி அழுதார்.

**மன்னிப்பு பெற்ற பேதுரு:** யூதாஸ் இஸ்காரியோத்து இயேசுவை காட்டிக்கொடுத்து பெரிய பாதகத்தை செய்தான். பேதுரு இயேசுவை மறுதலித்து பெரும்பாவம் செய்தார். இருவரும் பாவிகளே, ஆனால் பேதுரு, இறைவன் அளவற்ற நன்மைத்தனம் கொண்டவர் என்று அசையாத நம்பிக்கை கொண்டு, மனம் வருந்தி, அழுது, இறைவனின் இரக்கத்தைப் பெற்றுக்கொண்டார். பரிசுத்த ஆவியைப் பெற்று, திடமனதுடன் நற்செய்தியை போதித்து, இயேசுவுக்கு சாட்சியாக வாழ்ந்து, மரித்து இன்றும் புகழுடன் வாழ்கிறார். மாபெரும் பீட்டர் சதுக்கத்தில் அவர் புகழ் பாரெங்கும் பரவியுள்ளது. அவரின் வாரிசான பாப்பரசர் பிரான்சிஸ் இயேசுவின் நற்செய்தி உலகின் மூலைமுடுக்கெல்லாம் சென்றடைய அயராது உழைத்து வருகிறார்.

**முடிவுரை:** பேதுரு “வெள்ளியோ பொன்னோ வைத்திருக்க வில்லை” “நசரேயனாகிய இயேசு கிறிஸ்துவின் பெயரால்” அனைத்தையும் செய்தார். நாமும் ஆண்டவர்மீது அசையா நம்பிக்கை கொண்டால் “கர்ச்சிக்கும் சிங்கம் போல் யாரை விழுங்கலாமென தேடித் திரியும்” அலகையின் பிடியிலிருந்து தப்பி ஆண்டவர் வகுத்தவழியில் நடக்கலாம். ஜூன் மாதம் 29 ஆம் நாள் பேதுருவின் திருநாளில் அவர் வழியைப் பின்பற்றிட இறைவனை வேண்டுவோம். ●



## திண்டிவனம் திரு. F. மரியசாமி, பேராசிரியர் அவர்களின் மறைவு

பிறப்பு: 02-03-1935 இறப்பு: 13-08-2018

திண்டிவனம் நிறுவனர் அருள்தந்தை டீ.பி அவர்கள், தந்தை பெக்கர், தந்தை கரோப் அடிகளிடம் பயிற்சி பெற்ற கடைசி மூத்த ஆசிரியர் 60 ஆண்டுகள் கல்வி பணி ஆற்றி முன்னோடியாக, வழிகாட்டியாக முதுபெரும் ஆசிரியராக வாழ்ந்து சாதனை படைத்தவர் திரு.F.மரியசாமி பேராசிரியர் அவர்கள்.

புனித அன்னாள் நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி,ஆர்.சி.ஆசிரியர் பயிற்சி பள்ளி அனைத்து நிறுவனங்களில் 38 ஆண்டுகள் சிறப்புடன் பணியாற்றினார். அர்ப்பண உணர்வோடு அயராது பணி ஆற்றி ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்ற பின்பும் பல பள்ளிகளில் தலைமை பொறுப்பேற்று தன்னார்வமுடன் தான் கற்றதையும் பெற்றதையும் பகிர்ந்து கொண்டு கற்பித்தலில் சரித்திரம் படைத்தார். ஆசிரியர் பணிக்கு அழகு சேர்த்தார்.

காலந்தவறாமை, கட்டுப்பாடு, கடமை உணர்வு, கடவுள் பற்று, சுறு சுறுப்பு போன்ற பண்புகளை இறுதிவரை பின்பற்றி அதையே அனைவர்க்கும் பயிற்சி அளித்த முன்னோடியாவார். உடற்கல்வி ஆசிரியர், வரலாற்று பேராசிரியர், சமூக ஆர்வலர் என பல நிலைகளில் ஆயிரம் ஆயிரம் மாணவர்களையும் நல் ஆசிரியர்களையும் உருவாக்கிய முதுபெரும் ஆசிரியர். மாவட்ட, மாநில அளவில் விளையாட்டு போட்டிகளில் மாணவர்களை வெற்றி பெற செய்து பள்ளிக்கு பெருமை சேர்த்தார்.

**திண்டி விடாதே - நம்பிக்கைக் கொள்** என்ற விருதுவாக்குடன் பல ஆண்டுகள் உள்விடுதி மாணவர்களுக்கு பலவிதமான பயிற்சிகளை தந்தவர். நம்பிக்கை நகரில் குடி இருந்தார். 1964 ம் ஆண்டு திருத்தந்தை தூதர் திண்டிவனம் வருகை தந்தபோது 1000 மாணவர்களை நிறுத்தி உடற் பயிற்சி செய்து காட்டி சிறப்பு பெற்றவர். ஒலி ஒளி காட்சிகளில் உலக மீட்பர் யேசுவாக நடித்தவர். ஒவ்வொரு முறையும் உண்ணா நோன்பிருந்து உருக்கமாக நடிப்பார். அன்னை மரியாள் மீது அளவு கடந்த பற்று கொண்டவர். காலை மாலை இறை வழிபாட்டில் பங்கு கொண்டு இறை வார்த்தைபடி வாழ்வை நடத்தியவர். தலத்திருச்சபைக்கு ஆலய பணிகளில் தானாக முன்வந்து பணியாற்றும் தன்னார்வ தொண்டுள்ளம் கொண்டவர். எடுப்பான தோற்றம் - மிடுக்கான நடை- நாளும் புத்தம் புதிய சீருடை, முறையான பயிற்சிகள் - எதிலும் ஒரு ஒழுங்குமுறை, காலம்தவறாமை பண்பை கடைசிவரை கடைபிடித்தவர்.

எங்கும் தூய்மை, எதிலும் புதுமை, சொல்லில் நேர்மை, என்றும் இளமை, வார்த்தையில் இனிமை இதுதான் ஆசிரியரின் பெருமை. சிக்கன வாழ்வு, சீரான உணவு, செயலில் வலிமை, வாழ்வில் எளிமை - நேர் நடை - அளவான எடையுடன் வாழ்ந்த ஆசிரியர். இறுதியில் உடல் நலம் குன்றியது. எடை குறைந்தது. சிகிச்சை பெற்றார். பலனில்லை. 83 வயதில் 13-08-2018 அன்று இறைவனடி சேர்ந்தார். அவரது துணைவியார் திருமதி. ரெஜினா ஓய்வு பெற்ற ஆசிரியை அவரது மகன் திரு.சார்லஸ் அரசு மேல் நிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராக பணியாற்றி வருகிறார். அவரது மூத்தமகள் திருமதி. சோபியா, இளைய மகள் திருமதி. போஷியா பட்டதாரி ஆசிரியர்களாக பணியாற்றுகின்றனர். மருமகள் திருமதி. சோபியா ஆசிரியராக பணியாற்றி வருகிறார்.

60 ஆண்டுகள் சர்வ வியாபியை வாசித்து வாழ்ந்து வந்தவர். அனைவரும் கூடி அஞ்சலி செலுத்துகின்றோம். இறைவனில் நிறைவாழ்வு பெற செபிக்கிறோம். அவர்கள் குடும்பத்தினர்க்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கிறோம். கல்வி பணியை கடவுள் பணி என ஆற்றிய எம் ஆசிரியர்க்கு முடிவில்லா பேரின்ப வாழ்வை தரவேண்டி செபிக்கிறோம்.

16-ம் நாள் நினைவுத் திருப்பலி: 28-08-2018 மாலை 6.00 மணிக்கு திண்டிவனம், புனித அந்தோணியார் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

தகவல்: திரு. A. சின்னப்பன், ஆசிரியர், திண்டிவனம்.

தொகுப்பு : ஆசிரியர்.

## புனித அல்போன்சா ஆலயத்தின் 6-ஆம் ஆண்டு விழா

28-7-2018 உழவர்கரையில் அரசு உயர் பள்ளியின் பின்புறம் உள்ள சுபாஷ் சந்திர போஸ் நகரில் மாலை 4.45 மணியிலிருந்து 6 மணிவரை பரிசுத்த ஆவி பாடலுடன் ஆரம்பமானது.

இதில் உழவர்கரை, மரியாள் நகர், செல்ல பாப்புநகர், பேராலய மக்கள் பங்கு பெற்று பயன் பெற்றார்கள். ஜெப மாலைக்கு பின்னர் நற்செய்தி சகோ. புஷ்பநாதன் அவர்கள் வழங்கினார். நற்செய்தியில், யாக்கோபு திருமுகம், கொரிந்தியர், துவக்க நூல் மற்றும் எசேக்கியேல் பகுதியிலிருந்து, எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருங்கள், பாவத்திற்கு மன்னிப்பு பெறுங்கள். குறைவான ஞானமுள்ளவர் இறைவனிடம் நம்பிக்கையோடு கேட்க அவர் தருவார். கடவுள் சோதனை அளிப்பதில்லை, நமது சிந்தையிலிருந்து வருகிறது இறைவார்த்தை கேட்பவர்களாக மட்டுமில்லாமல் அதனை பின்பற்றுபவர்களாகவும் இருக்க வேண்டும். நற்செய்தி அறிவிக்க வேண்டியது நமது பொறுப்பு.



ஆள்பார்த்தும், ஆடையை பார்த்தும் ஆலயத்தில் முன்னுரிமை கூடாது; அடுத்திருப்போரை அன்பு செய்ய வேண்டும் என்று யாக்கோபு திருமுகத்தில் உள்ளது.

புனித அல்போன்சா நவினாவுக்குப் பின்னர் பங்கு மக்களுக்காகவும், 10, +12 வகுப்பு படிக்கும் பிள்ளைகளுக்காகவும் வயோதிகர்கள், வியாதியுற்றவர்கள், வரமுடியாதவர்களுக்காகவும் ஜெபிக்கப்பட்டது. நற்செய்தி வழங்கிய சகோதரர் அவர் குடும்பத்தினருக்கு நன்றி கூறி ஜெபிக்கப்பட்டது. பின்னர் சிறப்பான சிற்றுண்டி வழங்கியவர்களுக்காக நன்றி கூறி இறுதிப் பாடலுடன் இனிதே முடிவுற்றது.

தகவல்: பொறிஞர் துரை அமல்ராஜ் குடும்பத்தினர்.

தொகுப்பு : ஆசிரியர்.

## 9-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

பிறப்பு: 15-04-1919



இறப்பு: 07-09-2009

**திரு. அ. அந்தோனிசாமி.**B.A.

**"சீரியதோர் பந்தயத்தில் ஓடினேன் ஓட்டத்தை முடித்து விட்டேன் விசுவாசத்தைப் பாதுகாத்தேன்." 2திமோ.4:7**

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 07-09-2018 வெள்ளிக்கிழமை காலை, கடலூர்-1, புனித கார்மேல் அன்னை ஆலயத்திலும், கடலூர்-2, காலை, புனித சூசையப்பர் ஆலயத்திலும், நெல்லித்தோப்பு, காலை, புனித விண்ணேற்பு அன்னை ஆலயத்திலும், காலை அரியாங்குப்பம், விசிடேஷன் சிற்றாலயத்திலும் பாடல் திருப்பலி நிறைவேற்றப்படும்.

**பிரிவால் வாடும்**
**மனைவி, பிள்ளைகள்,**
**மகள்:**Sr.**அனிதா** FIHM, Visitation, Ariankuppam.
**பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.**

# விண்ணக வாழ்வின் நினைவு அஞ்சலி

Né le: 7-1-1917



Décédé le: 18-8-1989

Née le: 16-9-1915



Décédée le: 8-2-2009

**FORTUNE COJANDESSOU** **FORTUNE MARIE THERESE**

*உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார் - யோவான்.11:25*

**இறைவா, இவ்வுலகிலிருந்து அழைக்கப்பட்ட இவர்களின் ஆன்மாவை நித்திய வாழ்வில் சேர்த்து முடிவில்லா ஒளியில் என்றும் உம்மோடு இருக்கும்படி செய்தருளும் ஆமென்.**

புனித ஜென்ம ராக்கினி மாதா பேராலயத்தில் 02-9-2018 ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கு திருப்பலி நிறைவேற்றப்படும். அனைவரும் கலந்துகொண்டு ஜெபிக்க அழைக்கின்றோம்.

*பிரிவால் துயருறும்*
மகன்: Raphael, மருமகள்: **ழுந்தார்க்**
பேரப்பிள்ளைகள்: **Annick, Diane, Paul**
புதுவை.

---

# நினைவு அஞ்சலி



**திரு. மரிய ஜெகநாதன்** **திருமதி. லூர்துமரி ஜெகம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தோற்றம் | : | 10-06-1919 | தோற்றம் | : | 23-03-1926 |
| மறைவு | : | 10-09-1983 | மறைவு | : | 01-12-2014 |

"உயிர்ப்பும் உயிரும் நானே, என்னில் விசுவாசம் கொள்பவர் இறப்பினும் வாழ்வார்" - யோவான் 11:25

அன்பின் ஊற்றே இறைவா! இவ்வுலகில் எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் திகழ்ந்து, எங்கள் வாழ்விற்கு வழிகாட்டியாய் இருந்து, எங்களுக்கு இறை பக்தியையும் நல்ல பண்புகளையும் கல்வி அறிவையும் ஊட்டி வளர்த்த தியாக உள்ளம் கொண்ட எங்கள் அன்புத் தாய், தந்தையை நினைத்து கலங்குகின்றோம். எங்கள் அருமை பெற்றோர்களுக்கு நித்திய இளைப்பாற்றியையும் முடிவில்லா ஒளியையும் தந்தருள வேண்டுமென்று இரக்கம் நிறைந்த இயேசுவே உம்மை நோக்கி மன்றாடுகிறோம்.

10-09-2018 திங்கள்கிழமை காலை 5.15 மணிக்கு புதுவை, ஜென்மராக்கினி அன்னை பேராலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

**அயர்லாந்து ஆயர்களுடன் திருத்தந்தையின் இறுதி சந்திப்பு:** நம்பிக்கை தளராமல் முன்னேறிச் செல்லும் அயர்லாந்து தலத்திருஅவைக்கு, அந்நாட்டு ஆயர்கள் வழியே, தன் நன்றியையும், பாராட்டையும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் தெரிவித்தார். பல்வேறு பிரச்சனை களை எதிர்கொண்டாலும், நம்பிக்கையில் உறுதியாக இருக்கும் அயர்லாந்து திருஅவைக்கு தன் நன்றியைத் தெரிவிப்பதாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அறிவித்தார். தன் அயர்லாந்து திருத்தூதுப் பயணத்தின் இறுதி நிகழ்வாக, டப்ளின் நகரின் தொமினிக்கன் துறவு சகோதரிகள் இல்லத்தில், அந்நாட்டு ஆயர்களைச் சந்தித்து உரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், உதவி தேவைப்படும் வறியோருக்கும், வீடற்றோருக்கும்,போதைப் பொருள் பழக்கத்திற்கு அடிமையானவர்களை மீட்பதற்கும், அயர்லாந்து திருஅவை ஆற்றிவரும் பணிகளைப் பாராட்டு வதாகக் கூறினார். சிலரது தவறான பாலியல் நடவடிக்கை யால் மனம் தளர்ந்து போயிருக்கும் அருள் பணியாளர் களுக்கு, ஊக்கத்தையும், புதுநம்பிக்கையையும் வழங்கி வரும் ஆயர்கள், அப்பணியில் தொடரவேண்டும் என்று திருத்தந்தை கேட்டுக்கொண்டார். கடந்த காலத் தவறு களை ஏற்று, சிறார்களை பாதுகாக்க எடுத்துவரும் நடவடிக்கைகளை இன்னும் தீவிரமாகத் தொடர வேண்டும் என்று அழைப்பு விடுத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நம்பிக்கையை முன்னெடுத்துச் செல்வதில் குடும்பங்களின் பங்களிப்பு ஊக்குவிக்கப்படவேண்டும் என்றும் ஆயர்களிடம் கேட்டுக் கொண்டார்.

**குழந்தைகளுக்காக தாய் செபிக்கும் கடமை:** புனித மோனிக்காவைப்போல் ஒவ்வொரு தாயும் தன் குழந்தை களுக்காக இடைவிடாது செபிக்க வேண்டும் என விண்ணப் பிக்கிறார் திருத்தந்தை. அன்னையர்கள் அனைவரும் புனித மோனிக்காவைப்போல் தங்கள் குழந்தைகளுக்காகத் தொடர்ந்து செபிக்க வேண்டும் என அழைப்பு விடுத்தார் திருத்தந்தை பிரான்சிஸ். ஆகஸ்ட் 27 இத்திங்களன்று சிறப்பிக்கப்பட்ட புனித மோனிக்கா திருநாளையொட்டி திருத்தந்தை "அன்பு அன்னையரே, மனந்தளராமல் புனித மோனிக்காவைப்போல் உறுதியுடன் இருங்கள். உங்கள் குழந்தைகளுக்காக இடைவிடாமல் செபியுங்கள்" என்றார். மேலும், வெளிநாட்டுத் திருத்தூதுப் பயணஙளுக்குப் பின்னர் உரோம் நகரின் புனித மேரி மேஜர் திருத்தலத்திற்குச் சென்று அன்னைமரிக்கு நன்றி கூறுவதை வழக்கமாகக் கொண்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இத்திங் களன்று காலையிலும் அங்கு சென்று அயர்லாந்து திருத்தூதுப் பயணத்திற்காக நன்றி கூறி செபித்தபின், வத்திக்கான் திரும்பும் வழியில், உரோம் நகரின் காம்போ மார்சியோவில் உள்ள புனித அகுஸ்தின் கோவிலுக்குச் சென்று புனித மோனிக்காவின் கல்லறையைத் தரிசித்தார்.

**அயர்லாந்து: சாட்சியமளித்த குடும்பங்கள்:** குடும்பத்தில் மன்னிப்பு மற்றும் நம்பிக்கை, பாட்டி தாத்தாக்களின் முக்கியத்துவம், குடும்ப வாழ்வில், சமூகத் தொடர்பு சாதனங்கள் மற்றும் தொழில்நுட்பத்தின் பங்கு போன்ற தலைப்புக்களில், Croke அரங்கில் குடும்பங்கள் சாட்சியங்கள் பகர்ந்தனர். குடும்பங்கள் விழாவில் கலந்துகொள்வதற்காக, ஆகஸ்ட் 25 சனிக்கிழமை இரவு 7 மணி 15 நிமிடத்திற்கு, திருப்பீட தூதரகத்திலிருந்து, டப்ளின் நகரின் Croke பூங்கா அரங்கத்திற்கு காரில் சென்றார், திருத்தந்தை பிரான்சிஸ். ஐரோப்பாவிலுள்ள மிகப்பெரிய அரங்கங்களில், இதுவும் ஒன்று. அயர்லாந்தின் தனித்துவம் மற்றும், வரலாற்றின் அடையாளமாகத் திகழும் இந்த அரங்கத்தில், 82 ஆயிரத்து 300 பேர் அமரலாம். திருத்தந்தை கலந்துகொண்ட இந்நிகழ்வில் ஏறத்தாழ எழுபதாயிரம் பேர் இருந்தனர். குடும்பங்கள் சாட்சியங்களைப் பகிர்ந்து கொள்ளும் போதும், கலைநிகழ்ச்சிகளிலும் திருத்தந்தைக்கு நெருக்கமாய் எல்லாரும் அமர்வதற்கு வசதியாக, சந்திப்பின் வட்டம் என்ற கருத்தில், இந்த அரங்கம் வடிவமைக்கப்பட்டிருந்தது. ஆயிரம் பேர் கொண்ட பாடகர் குழு, ஐம்பது இசைக்கருவிகள் குழு, 700 க்கும் அதிகமான நடனக்கலைஞர்கள் என, அயர்லாந்தின் சிறந்த கலைஞர்களும், பாடகர்களும் இந்நிகழ்வில் கலைநிகழ்ச்சி களை நிகழ்த்தினர். இத்தாலியின் புகழ்பெற்ற, பார்வையற்ற பாடகர் அந்த்ரேயா பொச்செல்லி மற்றும்,அமெரிக்காவின் புகழ்பெற்ற ஒரு ஜாஸ் பாடகர் குழுவினரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.இந்நிகழ்வில், முதலில் திருப்பீட பொதுநிலையினர், குடும்பம் மற்றும்வாழ்வு அவையின் தலைவர், கர்தினால் Kevin Joseph Farrell அவர்கள் வரவேற்புரை வழங்கி குடும்பங்களுக்காகச் செபித்தார்.

**இந்தியா: ஒடிசா திருஅவையில் கந்தமால் நினைவு நாள்:** பேராயர் ஜான் பார்வா ஒடிசா மாநில கத்தோலிக்க திருஅவை, கந்தமால் மறைசாட்சிகளின் குருதியால் வளப் படுத்தப்பட்டுள்ளது. 2008 ம் ஆண்டில், ஒடிசா மாநிலத்தில் கிறிஸ்தவர்க்கெதிராக நடத்தப்பட்ட வன்முறையின் பத்தாம் ஆண்டு நினைவு, ஆகஸ்ட் 25,இச்சனிக்கிழமையன்று புபனேஸ்வர் நகரில், கடைப்பிடிக்கப்பட்டது. கட்டக்-புபனேஸ்வர் பேராயர் ஜான் பார்வா அவர்கள், புபனேஸ்வர் புனித யோசேப் பள்ளியில், இந்திய ஆயர் பேரவை பிரதிநிதிகளுடன் இணைந்து, "ஒப்புரவு, நன்றியறிதல் மற்றும் திருவருள்" என்ற தலைப்பில், திருப்பலி நிறைவேற்றினார். ஒடிசாவில் பெய்யும் மழையினால், இந்த நினைவு நாளில் பெருமளவில் மக்களால் கலந்துகொள்ள இயலாதெனினும், இந்நாள் அந்தந்தப் பகுதிகளில், பல்வேறு முறைகளில், நினைவுகூரப்பட்டது. 2008ம் ஆண்டில் ஒடிசா மாநிலத்தின் கந்தமால் மாவட்டத்தில் இடம்பெற்ற கிறிஸ்தவர்க்கெதிரான வன்முறையில், பலர் உயிரிழந்தனர் மற்றும் நூற்றுக்கணக்கான வீடுகளும், ஆலயங்களும், கத்தோலிக்க நிறுவனங்களும் தீயிட்டு கொளுத்தப்பட்டன. மேலும், ஆகஸ்ட் 28ம் தேதி ஒடிசாவின் தலைநகரில், கிறிஸ்தவர்கள் பெரிய அளவில் பேரணி நடத்தி, முதலமைச்சர் நவீன் பட்நாயக் அவர்களிடம், அந்த வன்முறையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு, நீதி மற்றும் இழப்பீடு கேட்டு மனு ஒன்றையும் சமர்ப்பிக்கத் திட்டமிட்டுள்ளனர். ஆகஸ்ட் 25ம் தேதி, கந்தமால் நாள் எனவும் அழைக்கப்படுகிறது.

**குறுநகை: சவப்பெட்டி - சமூக வலைத்தளம்:** ஒரு நாள் சவப்பெட்டிகளைத் தயார் செய்து விற்கும் அன்பர் ஒருவர், தான் செய்து முடித்த சவப்பெட்டி ஒன்றைத் தன்னுடைய வேன் அமைப்பில் உள்ள கார் ஒன்றில் எடுத்துக்கொண்டு, அதை கேட்ட மனிதருக்கு டெலிவரி செய்வதற்காகப் போய்க் கொண்டிருந்தார், போகும் வழியில் கார் மக்கர் செய்து வழியில் நின்றுவிட்டது. அதை ஓரமாக நிறுத்திய அவர், தாமதம் ஆகக்கூடாது என்பதற்காக பெட்டியை மட்டும் தலைச் சுமையாக எடுத்துக் கொண்டு நடந்து செல்ல ஆரம்பித்தார். அது நடு நிசி நேரம். நன்றாகக் கவனிக்கவும் நடுநிசி நேரம். எதிரே தன்னுடைய மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த போலீஸ் அதிகாரி ஒருவர், அவரை மடக்கிப் பிடித்து, பணம் பறிக்கும் நோக்கத்துடன், விசாரணை செய்யத் துவங்கினார். "யோவ் சவப்பெட்டியைத் தூக்கிக் கொண்டு, இந்த வேளையில் எங்கே போகிறாய்?" நம் ஆசாமி பதில் சொன்னார் "என்னைப் புதைத்திருந்த இடம் எனக்குப் பிடிக்கவில்லை. வேறு நல்ல இடத்தைத் தேடிப் பெட்டியுடன் போய்க் கொண்டிருக்கிறேன்." போலீஸ்காரர் மயங்கி விழுந்து விட்டார்!

Printed and Published on behalf of Most Rev. Dr. A. ANANDARAYAR, Archbishop of Pondicherry & Cuddalore, by Rev. Fr. C.ANTONI ROCHE, Manager, MISSION PRESS & Editor, Sarva viabi, 196, Cathedral Street, Pondicherry - 605 001.